ஓம்

சித்த ஸமாஜ ஸ்தாபகராகிய

சுவாமி ஸ்ரீ சிவானந்த பரமஹம்ஸரால்

1921ம்ஸ்ரீ மேமீ 2உ முதல் நடப்பில்

கொண்டுவரப்பட்ட

சித்த ஸமாஜ சட்டங்கள்.

பிரசுரிப்பு அதிகாரம்

சித்த ஸமாஜ ஜெனரல் பிரஸிடேண்ட்டுக்குரியது.

இஃது

மலையாள பாஷையிலிருந்து

தமிழில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது.

இப்புஸ்தகம் சித்த ஸமாஜ ஸ்தாபகர்

சுவாமி ஸ்ரீ சிவானந்த பரமஹம்ஸர் அவர்கள் உத்திரவின்படி

மதுரை சித்த வித்யா அப்யாசிகளால்

அச்சிடப்பட்டது.

....

1941.

இதன் விலை] காப்பி 1000. [அணு 6.

ஓம்

சித்த ஸமாஜ சட்டங்களின் அட்டவணை.

முகவுரை:— மதம், சித்த ஸமாஜம், நமது வேலை, ஸமாஜ கோள்கை.

சட்ட நிர்.	விபரம்.	சட்ட நிர்.	விபரம்.
	I. சித்த ஸமாஜ சட்டங்கள்.	19	புதிய நாமதேயங்கள்
		20	அன்யோன்யம் கூப்பிட வேண்டிய கிரமம்
		21	அலங்காரங்கள்
1	நாமும், சமாஜமும்	22	கொண்டாட்டங்கள்
2	சித்த ஸமாஜஸ்தன்	23	ஆகார வியாபாரங்கள்
3	ஸமாஜத்தில் சேரவேண்டிய கிரமம்	24	பிரிந்தவர்களின் விண்ணப்பம்
4	அபேக்ஷாபாரம்	25	ஸாக்ஷி
5	உடன்படிப் பத்திரத்தினுடைய வாசகம்	26	கிரிமினல் கேஸ்
6	ஸமாஜத்தில் சேர்ந்தால் இருக்கவேண்டிய கிரமம்	27	பிறர் நிந்திப்பும், ஆக்ஷேபணைகளும்
7	ஸமாஜ ரிஜிஸ்டர்	28	அன்னிய சங்கங்கள்
8	லாகிரி வஸ்துக்கள்	29	அன்னியருடைய ஆக்ஷேபங்கள்
9	புலாலுண்ணல்	30	அன்னியரோடுள்ள ஏற்பாடுகள்
10	தைரியமும், பொறுமையும்	31	மனக்கிலேசமும், ஜட தண்டனையும்
11	அனுச்சாரங்கள்	32	சன்யாசமும், மௌனமும்
12	பிதிர்ப்பிண்டங்கள்	33	அன்னியர் சகவாசம்
13	மந்திர தந்திரங்கள்	34	அன்னியருடைய அபிப்பிராயங்கள்
14	மாதவிடை (ருது)	35	அன்னியருடைய அதிகாரங்கள்
15	சாதாரண ருதுவானால் செய்யவேண்டிய கிரமம்	36	அன்னியரின் தயையும், இஷ்டமும்
16	பிரவிடையானால் (முதலாவது ருது) செய்ய வேண்டிய கிரமம்	37	அன்னிய ஸ்திரீகள்
17	நாகரீக (பலவித வர்ணம்) உடைகள்	38	அன்னியரைப்பற்றியுள்ள ரிப்போர்ட்டுகள்
18	ஸ்தானப் பெயரும், ஜாதிப் பெயரும்		

சட்ட நிர்.	விபரம்.
39	அன்னியருடைய சாதனங்கள் (பொருள்கள்)
40	விவாகம்
41	ரோக சிஷ்ருசை
42	ஸமாஜத்திலிருந்து விலகிய வர்களோடுள்ள சகவாசம்
43	முன் பந்தங்கள்
44	உத்தரவின்றி வெளியில் தாமதம்
45	ஜாதி மதம்
46	நல்வழிக்குள்ள பிரயத்தனம்
47	லௌகிக ஏற்பாடுகள்
48	ரகஸ்ய சம்பாஷணைகள்
49	ரகஸ்யக் கடிதங்கள்
50	அன்னியோன்யக் கடிதப் போக்குவரத்து
51	அன்னியோன்யக் கட்டுப்பாடு
52	கர்ப்பிணிகள்
53	குரோதம்
54	பயம்
55	சிநேகம்
56	பெருமையும், கொர்வமும்
57	ராகத்துவேஷ செய்கைகள்
58	ஸத்யாக்ரஹம்
59	சமத்வம்
60	சுவாதந்திரியம்
61	கோள் சொல்லலும், துவேஷமும்
62	பழய ராகத்துவேஷ செய்கைகள்
63	வெளி விவகாரங்கள் முதலியவை
64	ஸமாஜத்தில் ஜீவிக்க இஷ்டமில்லாதவர்
65	பகல் உறக்கம்
66	ஸமாஜத்திலுள்ள குழந்தைகள்
67	குழந்தைகளுடைய உத்தரவாதங்கள்
68	குழந்தைகளின் ஜீவிதம்
69	ஸ்திரீகளுடைய ஜீவிதம்
70	பாரியை
71	மனைவியுடன் சேருவதற்குள்ள கிரமம்
72	பாரியாளோடுள்ள சம்யோகம்
73	ஸதிபதிகளின் நிலைமை
74	சிரேஷ்ட ஸந்தானத்திற்குள்ள முறை
75	பிரேமக்கலகம்
76	பர்த்தாவைப் பின்பற்றும் பாரியை
77	பர்த்தாவுடன் பின் துடரா பாரியை
78	ஸ்திரீகளோடுள்ள அனுவசியப்பழக்கங்கள்
79	ஸ்திரீ புருஷர்களின் நடவடிக்கை
80	குற்றத்திற்கு இடங்கொடுத்தல்
81	ரகஸ்யக்கடிதமும், பதிலும்
82	ஸந்தேகமான ரகஸ்யக் கடிதங்கள்
83	தூஷணையான ரகஸ்யக் கடிதங்கள்
84	நம்முடைய ஸ்திதி
85	ஒழியாமல் பேசவேண்டிய கிரமம்

II. ஆகாரச் சட்டங்கள்.

சட்ட நிர்.	விபரம்.
86	தனிமையான ஆகாரம்

சட்ட நிர்.	விபரம்.
87	ஸக்தினியும் ஸபீதியும்
88	ஸக்தினியினுடைய நிலைமை
89	ஆகாரம் சாப்பிடவேண்டிய முறை
90	ஜெபசமயத்திலுள்ள ஆகாரம்
91	ஸமாஜத்தாருடைய ஆகார சமயம்
92	அன்னியர்களுக்கு ஆகாரம் கொடுத்தல்
93	காப்பி, டீ முதலிய பானங்கள்
94	கடுகு விபரமும் ஸமாஜக் காரர்களும்
95	புளிப்பு சாமான்கள்
96	பிரத்யேக ஆகாரங்கள்
97	சமைக்காத ஆகாரங்கள்

III. சித்த வித்யா சட்டங்கள்.

சட்ட நிர்.	விபரம்.
98	சித்தவித்யையின் விபரம்
99	சித்த வித்யா அப்யாசமும், மகத்வமும்
100	சித்த வித்யயை அப்யாசிக்கவேண்டிய சமயங்கள்
101	சித்த வித்யா அப்யாச முறை
102	வாயுவை பலாத்கரித்தல்
103	சித்த வித்யாவின் அனுபவங்கள்
104	சித்த வித்யா வாதப் பிரதிவாதம்
105	அனுபவ சிரத்தை
106	ஜெபத்திற்கு வராதவர்
107	சித்தாட்டம்
108	சித்த வித்யயை அப்யசிக்கச்செய்தல்
109	ஜெப சமயத்தில் கூடாதவர்
110	ஜெபத்தில் அசிரத்தை
111	ஜெபசமயத்தில் தூக்கம்
112	குறித்த சமயத்தில் ஜெபிக்காதவர்
113	ஜெபிக்காதவருக்குள்ள தண்டனை
114	அவரை உதவியவர்க்குள்ள தண்டனை
115	ஜெபம் முடிந்தவுடன் தூங்குவது
116	மரணம் (மரித்தல்)

IV. ஆஸ்ரம ஸ்தாபன சட்டங்கள்.

சட்ட நிர்.	விபரம்.
117	ஆஸ்ரமவாஸம்
118	ஆஸ்ரமத்திற்கு கொடுத்த சொத்தினுடைய விபரம்
119	ஆஸ்ரமக்குடும்பம்
120	ஆஸ்ரம ஸ்தலங்கள்
121	அன்னியருடைய பிரவேசம்
122	அக்கிரமப் பிரவேசம்
123	தானச் சொத்தினுடைய அதிகாரம்
124	ஸமாஜ சொத்தினுடைய விற்கிரைய சுவாதந்திரியம்
125	புதிய ஸ்தலங்கள்
126	கொடுக்கல் வாங்கலும், தஸ்தாவேசுகளும்
127	சாசன சொத்தினுடைய வாசகம்

சட்ட நிர்.	விபரம்.

128 சொத்துக்களினுடைய பாத்தியதை
129 சொத்துக்களின்பேரில் கடன்கள்
130 கிஸ்திப்பகுதிகள்
131 ஆஸ்ரம ஸ்தலத்திலுள்ள உற்பத்திகள்
132 ஏற்பாடுகளின் விபரங்கள்

V. வர்த்தகமும், கைத்தொழில்களும்.

133 வியாபாரமும், கைத்தொழிலும்

VI. ஆஸ்ரம சிலவுகள்.

134 ஆஸ்ரமத்தின் சிலவுகள்
135 அன்னியரக்ஷாஸ்ரயம்
136 ஆஸ்ரமச் சிலவினுடைய உத்தரவாதமும், மேற்பார்வையும்

VII. ஆஸ்ரமவேலைகள்.

137 வேலைகளின் உத்தரவாதம்
138 அன்னியருடைய சகாயம்
139 காலானுசரணை வேலைகள்
140 வேலையிலுள்ள நிபந்தனை
141 வேலையில் விடுபட்டவர்கள்
142 வேலையில் சோம்பல்
143 ஆஸ்ரம வேலையில் சோம்பலைப்பற்றியுள்ள விபரம்
144 அதற்குள்ள தண்டனை

VIII. மினிட் சட்டங்கள்.

145 மினிட் எழுதவேண்டிய முறை
146 மினிட்டரைப்பற்றியுள்ள பேச்சுகள்
147 மினிட் எழுதுவதிலுள்ள தவறுகள்
148 அதற்குள்ள தண்டனை
149 மினிட்டரும், மினிட்டும்
150 மினிட்டெடிடருடைய சிக்ஷாதிகாரம்
151 கள்ளமினிட் எழுதுவதிற்குள்ள தண்டனை
152 தொழில் இடத்திலுள்ள மினிட்டு
153 மினிட் எழுதமுறையில்லாதவர்
154 மினிட்டரை நியமித்தல்
155 மினிட்டருடைய மேல் உத்தியோகஸ்தர்
156 மினிட் காண்பித்துக் கொடுத்தல்
157 மினிட்டு பரிசோதனை
158 ஹெட்டாபீஸ் மினிட்டு.
159 ஜெப மினிட்டர்
160 ஜெப மினிட்டருடைய தவறுகள்
161 ஜெபமினிட்டரை நியமித்தல்.
162 மினிட் அனுப்பவேண்டிய முறை

IX. ஸமாஜபரிபாலனம்.

163 பரணகர்த்தாக்கள்

சட்ட நிர்.	விபரம்.
164	அங்கங்களைப்பற்றியுள்ள பொறுப்புகள்
165	நியாயமற்ற செய்கைகள்
166	உத்தியோகஸ்தர்களுடைய தவறுகள்
167	அதற்குள்ள தண்டனை
168	பரிபாலனம்
169	ஸமாஜ அங்கங்களை நீக்குதல்
170	அங்கங்களுடைய ஆக்ஷேபணைகள்
171	சிரில்லா பரணம் (பரிபாலனக்குறைவு)
172	ஸமாஜ அங்கங்களும், நாமும்
173	அனுமதிப்பத்திரம்
174	தலைமையாபீசுக்கு செல்வது
175	நமக்குள்ள விண்ணப்பங்கள்

X. குற்றங்களும், பரிகாரங்களும்.

சட்ட நிர்.	விபரம்.
176	குற்றத்திற்குள்ள சமாதானம் (கேள்வி)
177	அதற்குள்ள தண்டனை
178	தான் அறியாத தவறுகள்
179	சமாதானமும், எச்சரிக்கையும்
180	மினிட் எடிட்டருடைய கண்டனம்
181	ஸ்தலமாற்றம்
182	நிராகார தண்டனை
183	ஜெனரல்பிரஸிடெண்ட்டுக்குள்ள அதிகாரம்
184	ஜெனரல் உத்தியோகஸ்தர்களுடைய குற்றங்களும், பரிகாரங்களும்
185	பிரித்தவராயும், பிரிந்தவராயுமுள்ளவரைச் சேர்த்தல்
186	சேர்க்கக்கூடாதவர்
187	மினிட் எடிட்டருடைய அதிகாரம்
188	ஜெனரல் பிரதிநிதிக்கு சேரவேண்டிய ரிப்போர்ட்டுகள்
189	ஜெனரல் பிரதிநிதிமேல் உத்தியோகஸ்தருக்கு தெரிவிக்கவேண்டிய சிக்ஷா ரிப்போர்ட்டு
190	ஜெனரல் பிரதிநிதியும், ஆஸ்ரமக்குறைகளும்
191	ஜெனரல் பிரஸிடெண்ட்டும், மினிட்டு எடிட்டரும் சிக்ஷிக்கவேண்டியதானவைகள்
192	ஜெனரல் உத்தியோகஸ்தர்களுடைய குற்றங்கள்
193	ஜெனரல் பிரஸிடெண்டினுடைய குற்றங்கள்
194	அதற்குள்ள தண்டனை
195	நமது அந்தரங்கக் காரியதரிசியினுடைய தவறுகள்

XI. ஆஸ்ரம உத்தியோகஸ்தர்களும், ரிக்கார்ட்டுகளும்.

சட்ட நிர்.	விபரம்.
196	ஆஸ்ரம உத்தியோகஸ்தர்கள்

சட்ட நிர்.	விபரம்.
197	அவர்களை நியமிப்பதற்கும் விலக்குவதற்கும் மற்றுமுள்ள அதிகாரங்கள்
198	இரண்டு உத்தியோகம்
199	மேற்பார்வை
200	ஆஸ்ரமப் பிரஸிடெண்ட்டு
201	ஆஸ்ரமக் காரியதரிசி
202	ஆஸ்ரமக் காரியதரிசியினுடைய ரிக்கார்ட்டுகள்
203	ஆஸ்ரம வாரரிப்போர்ட்டு
204	வாரரிப்போர்ட்டு அனுப்ப வேண்டிய முறை
205	ஸ்டோர் வரவு சிலவு கணக்கும், வாரரிப்போர்ட்டும்
206	ஆஸ்ரம பொக்கிஷதார்
207	பொக்கிஷதாருடைய கடமை
208	ஆஸ்ரமச் செலவுகள்
209	பாதுகாப்பினுடைய உத்தரவாதம்
210	மூலதனமும், கணக்கும், பரிசோதிப்பு
211	மூலதனமும், ஜெனரல் பொக்கிஷதாரும்
212	நமக்குள்ள நிதி (சுவாமி பண்டு)
213	ஆஸ்ரம பொக்கிஷதாருடைய ரிக்கார்ட்டுகள்
214	ஆஸ்ரம ஸ்டோரும், ஸ்டோர்கீப்பரும்
215	ஸ்டோர் கணக்கு
216	ஆஸ்ரமவகை விவசாய மானேஜர்
217	விவசாய ரிக்கார்ட்டுகள்
218	விவசாய ஏற்பாடுகள்

XII. ஜெனரல் உத்தியோகஸ்தர்களும், ரிக்கார்ட்டுகளும்.

சட்ட நிர்.	விபரம்.
219	தலைமை ஆபீஸ்
220	ஜெனரல் உத்தியோகஸ்தர்கள்
221	ஜெனரல் பிரஸிடெண்ட்டு
222	ஜெனரல் உத்தியோகஸ்தர்களை நியமித்தல்
223	தற்கால ஜெனரல் வகை நியமனங்கள்
224	ஜெனரல் டைரி (Diary)
225	பரிபாலனத்தின் முடிவுகள்
226	மினிட் பரிசோதிப்பவருடைய கடமை
227	மினிட் எடிட்டர்
228	மினிட் பரிசோதகர்
229	மினிட் பரிசோதகரின் ரிக்கார்ட்டுகள்
230	மினிட் எடிட்டருடைய ரிக்கார்ட்டுகள்
231	ஜெனரல் பிரஸிடெண்ட்டுக்கு சேரவேண்டிய மினிட் எடிட்டரின் வாரரிப்போர்ட்டுகள்
232	ஜெனரல் பிரதிநிதிக்கு சேரவேண்டிய மினிட் எடிட்டருடைய வாரரிப்போர்ட்டுகள்
233	ஜெனரல் காரியதரிசியினுடைய வேலைகளும், ரிக்கார்ட்டுகளும்
234	ஜெனரல் காரியதரிசியும், அங்கங்களும்

சட்ட நிர்.	விபரம்.	சட்ட நிர்.	விபரம்.
235	ஜெனரல் பொக்கிஷதாருடைய வேலைகளும் ரிக்கார்ட்டுகளும்	243	ஜெனரல் பிரதிநிதியினுடைய ரிக்கார்ட்டுகள்
236	ஜெனரல் பிரதிநிதியும், பரிபாலனமும்	244	புதிய ஜெனரல் பிரதிநிதியை நியமித்தல்
237	ஜெனரல் பிரதிநிதியும், புதிய ஏற்பாடுகளும்	245	அதற்குள்ள விளம்பரம்
238	ஜெனரல் பிரதிநிதியினுடைய வேலைகள்	246	ஜெனரல் பிரதிநிதியும், சொத்துக்களும்
239	ஜெனரல் பிரதிநிதிக்கு சேரவேண்டிய ரிப்போர்ட்டுகள்	247	ஜெனரல் பிரஸிடெண்டினுடைய பரிபாலனம்
240	ஜெனரல் பிரதிநிதியும், விவசாயமும், கைத்தொழிலும், வியாபாரமும்	248	வார ரிப்போர்ட்டும், பரிபாலனமும்
241	ஜெனரல் பிரதிநிதியும், விவகாரங்களும்	249	வருஷாந்திர ரிப்போர்ட்டுகள்
242	ஜெனரல் பிரதிநிதியினுடைய வாரரிப்போர்ட்டு		**XIII. நம்முடைய அந்தரங்கக்காரியதரிசி.**
		250	நமது அந்தரங்கக்காரியதரிசியினுடைய வேலைகள்

கள்ளிக்கோட்டை

21—7—'31

சுவாமி உத்தரவு,

ஜெனரல் பிரஸிடெண்ட்டுக்கு

முன்பு இருந்த சட்டங்களை திருத்தியமைத்து இத்துடன் அனுப்புகின்ற சட்டங்களுக்கனுசரித்து ஸமாஜத்தை நடத்திக் கொண்டுவரவும்.

சுவாமி சொல்ப்பிரகாரம்,

(Sd.) S. சங்குண்ணி,

சித்த ஸமாஜ ஸ்தாபகர்:



சுவாமி ஸ்ரீ சிவானந்த பரமஹம்ஸர்.

ராஜேஸ்வரி பிரஸ், மதுரை.

ஓம்

சித்த ஸமாஜம்.

ஸ்தாபகர்:— சுவாமி ஸ்ரீசிவானந்த பரமஹம்ஸர்.

சித்த ஸமாஜ சட்டங்கள்.

மதம்:—

நடப்பில் கோண்டுவேரப்பட்ட தேதி 11—4—'26.

ஆதியில் யாதொரு மதமும் கிடையாது. சத்தியம், நியாயம், மரியாதை, ஐக்கியம், ஸாதுசம்ரக்ஷணே, ஸகோதர சிநேகம், தர்ம பரிபாலனம் என்ற இக்குணங்களுடன் ஒரே ஜாதி, ஒரே ஈஸ்வரன் என்றுள்ள விதத்தில் இருந்திருக்கிறதாகும். அதன்பிறகு கொஞ்சம் கொஞ்சமாக அந்தஸ்துகள் பிறந்து, அதோடு ஒவ்வொரு தேசத்தையனுசரித்து துரபிமானம் வளர்ந்திருக்கிறது. அதன் நிமித்தம் ஒவ்வொரு வேறுபாடுகளாகி, அவ்வேறுபாடுகள் நிமித்தமாக ஜாதிகள் உண்டாகியிருக்கின்றன. அது முதிர்ந்து ஜாதிப்பிரிவுகள் ஏற்பட்டு முடிவில் அந்தந்த ஜாதிகளில் ஒவ்வொரு தலைவர்களாய்த் தோன்றியிருக்கின்றார்கள். அத் தலைவர்களுடைய நியமப்பிரகாரம் அவர்களுக்குப்பின் மதங்களாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

மதம் என்கிற அவஸ்தை ஏற்படும்பொழுது சத்தியம் போய் விடுகின்றது. சத்தியமும், மதமும் சேர்ந்திருக்கிறதில்லை. அது எவ்விதமெனில் என்னுடைய மதம், உன்னுடைய மதம் என்ற வேற்றுமைகளினால் பிரிவுகள் ஏற்படுவதிலிருந்து சத்தியம்

போய்விடுகின்றன. அத்தருணத்தில் அவனவனுடைய மதத்திற்கு வேண்டி மாத்திரம் எதுவும் செய்கிறார்கள். அப்பொழுது அங்கு சத்தியமில்லை, நியாயமில்லை, மரியாதையில்லை, ஐக்கியமில்லை, ஸகோதர சிநேகமில்லை, ஸாது சம்ரக்ஷணையில்லை, தர்ம பரிபாலன மில்லை. இப்பிரகாரம் உலகத்தில் மேற்கண்ட எல்லா குணங்களும் நாசமடைந்து, அசத்தியத்தில் மாத்திரமாயும், நியாய மரியாதை யில்லாமலும் இருக்கின்றது. அதனால் மதங்களை நாசம் செய்து சத்தியம், நியாயம், மரியாதை, அஹிம்சா என்ற அவஸ்தைகளை ஸ்தாபித்து உலகத்தை நிலைநிறுத்திக்கொண்டு வருகின்றதற்கு வேண்டி யாரொருவர் பிரயத்தனம் செய்கின்றாரோ அவர்தான் சித்த ஸமாஜக்காரராகும். ஆனதினால் மேலே சொல்லப் பட்ட எல்லா சற்குணங்களையும் உலகத்தில் ஸ்தாபிப்பதற்கு வேண்டி பொதுஜனங்களிடையில் பிரசாரப்படுத்தி அறியும்படி செய்து நடப்பில் கொண்டு வருவதற்காக எல்லோரிடமும் மிக்க தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

<u>சித்த ஸமாஜம். 5—2—'27.</u>

எல்லோருடைய மனதிற்கும் ஸாந்தி ஏற்படுவதாயிருந் திருந்தால் ஸமாஜம் அவசியமில்லாததாயிருந்தது. ஆகையினால் அவ்விதமில்லாததைப் பார்த்துக்கொண்டுதான் நாம் ஸமாஜம் ஸ்தாபித்ததாகும். காரணம், உலகத்தில் ராகத்துவேஷாதிகளினால் அநேக அனர்த்தங்களும், பல சச்சரவுகளுமுண்டாக்கிக்கொண்டு ஜனங்கள் அதோகதியாய் நசித்து செத்துப்போகின்றதைப்பார்த்து அதனுடைய நிவர்த்தியின் பொருட்டும், உலக நன்மைக்காகவும் பகீரதப் பிரயத்தனத்துடன் தான் அதிக கஷ்டங்கள் அனுபவித்து அதிதீவிர முயற்சியால் ஜீவனுடைய ஊர்த்துவ கதியைக்கண்டு பிடித்து, சத்துப்போகின்றதிலிருந்து நிவர்த்தித்து விமோசனம்

அடைந்து இருப்பதற்குவேண்டி அவ்வழியை உலகத்தாருக்கு தெரியப்படுத்தி உணர்த்திவைத்து எல்லோரும் தத்துவசிந்தனைக் காரர்களாகி உலகம் க்ஷேமத்திலிருப்பதற்காக எத்தனித்து ஓர் தரை கட்டி வைத்ததாகும் சித்த ஸமாஜம்.

நம்முடைய செய்கை. 15—12—'25.

அப்பிரகாரம் சித்த ஸமாஜம் ஸ்தாபித்த நாம் நம்முடைய அவசியத்திற்குவேண்டி யாதொன்றும் ஏற்படுத்துகின்றதில்லை. நாம் யாதொரு விதத்திலும் உலக உபத்திரவம் செய்கின்றவனு மல்ல; நாம் செய்கின்றதெல்லாம் உலக ஸாந்திக்காகவும், உலக உபகாரத்திற்கு வேண்டியுமாகும்.

ஸமாஜ உட்கருத்து. 5—2—'27.

ஆனால் ஸமாஜம் ஏதுபிரகாரம் ஆகவேண்டுமென்றால் பக்ஷி ஜென்மத்திற்கு துல்லியமாய் வரவேண்டும். அது எவ்விதமெனில் பக்ஷிகளுக்கு யாதொரு தடங்கலும், பந்தங்களும் இல்லாத பிரகாரம் அதுகளுடைய சொந்த இஷ்டப்பிரகாரம் எவ்விடங் களிலும் சஞ்சரிக்கலாம். கீழே வந்தால்தான் அவைகளுக்கு தீங்கு ஏற்படுகின்றதாகும். ஆகவே, நாமும் சுவாதந்திரியமாகவும், பந்த மில்லாமலும் தன் சொந்த இஷ்டப்பிரகாரம் ஸாந்தனுகியும், சந்தோஷமுள்ளவனுயும், ஸர்வஜன பிரீதனுகியும் நடந்துக்கொள்ள வேண்டும். ஆனால் அது எவ்விதமென்றால் நம்முடைய மனோ விர்த்திகளை மேற்பாகமாக நிறுத்தி முன் சொல்லப்பட்ட பக்ஷிகளைப் போலவே சொந்த உத்தேசப்பிரகாரம் நடந்தால்தான் அது சாத்தியப்படுவதாயிருக்கின்றது. அவ்விதமில்லாமல் மேலே கொண்டுபோகவேண்டிய மனோவிர்த்திகளை கீழ்பக்கம் கொண்டு வந்து தீங்கிலகப்பட்டு நாசமடைவதிலிருந்து தப்பிக்க வேண்டி எல்லாச்சமயங்களிலும் முயற்சியுடனும், மேல்கதியுடனும் கூடி யிருக்கவேண்டியதாகும்.

1. நாமும், ஸமாஜமும். 28—6—'24.

சித்த ஸமாஜத்தில் இப்பொழுதுள்ள சட்டங்களை யாதொருவ ராலும் மாற்றக்கூடியதல்ல. அதானது மாற்றவேண்டிவரும் காலத்தில் நாமே அது மாற்றுகின்றதாகும். இப்பொழுது நடப்பி லுள்ள சட்டங்களுக்கனுசரித்து நடப்பதற்கு இஷ்டமுள்ளவர்தான் ஸமாஜத்தில் சேரவேண்டியது. நம்முடைய இஷ்டத்திற்காக வேண்டி யாதொரு காரியமும் எவரும் செய்யவேண்டியதில்லை. நமக்கு யாதொரு இஷ்டமுமில்லை. ஸமாஜத்தைப்பற்றி நமக்கு யாதொரு பாத்தியதையுமில்லை. ஸமாஜம் உலக ரக்ஷைக்கு வேண்டி யாகும். அது நம்முடைய ரக்ஷைக்கு வேண்டியல்ல. ஆனால் உலக ஸாந்திக்கும், உலக ரக்ஷைக்கும் வேண்டியதான முயற்சியைத் தான் நாம் செய்கின்றது. அதை சரிதானென்று தோன்றுகின்ற தானால் அவனவனுடைய பூர்ண மனதாலே எல்லாப்பந்தத்தையும், சுயார்ஜிதத்தையும் விட்டு ஸமாஜ சட்டம் 5-வது பாராவை அனுசரித்து நடப்பதற்கு இஷ்டமுள்ளவர்களைத்தான் ஸமாஜத்தில் சேர்க்கின்றதாகும்.

2. சித்த ஸமாஜஸ்தன். 6—7—'25.

தானும், தன்னால் எதொன்றைப் பார்க்கப்படுகின்றதோ அதெல்லாம் தன்னிலிருந்து பிரதிபிம்பித்ததென்றும், அது தன்னுடைய ஜீவன்தான் என்றதான திடவிஸ்வாசத்துடனும் கூடி யாதொன்றிலும் பேதமில்லாமலும் ராகம், துவேஷம், மதம், மல்சரம், காமம், குரோதம், லோபம், மோஹம், டம்பு, அசூயை (பொறுமை), தர்பம், ஈர்ஷிய, அகங்காரம், இச்சா இவைகளை விட்டு இராகத்துவேஷ விகீனர்களாகி, நிஷ்கபடர்களாகி, நிர்மலமுள்ள வர்களாகி, நிஷ்காமிகளாகி, நிர்தோஷிகளாகி, நிர் அகங்காரிகளாகி, சமபுத்தியுள்ளவர்களாகி, ஸர்வதா ஸந்தோஷமுள்ளவர்களாகி, மன தும், பேச்சும், தொழிலும் ஒன்றாக நடத்தி சமபாவனையோடு கூடி இஷ்டாநிஷ்டம் துல்லிய பாவத்துடன் சஹித்து, புத்திர தாராதி களில் நிஷ் சிநேகம் செய்து, நித்ய விர்த்திகளுக்குத் தடங்கல் வராதபடி ஸத்தியத்தை மாத்திரம் நிலைநிறுத்தி மஹா ஸாந்தனாகி, ஸர்வதா உலக ஸாந்தி! உலக ஸாந்தி!! உலக ஸாந்தி!!! என்றுள்ள

உத்தேசத்துடனும், ஏகபக்தியாயிருக்கின்ற திடப்பிரக்ஞையுடனும், சிரத்தையுடனும் கூடி ஏகோதர ஸகோதர சிநேகத்துடன் நடந்து கொள்ளுகிறவர்களாகி எவரொருவர் இருக்கின்றாரோ அவராகும் சித்த ஸமாஜஸ்தன்.

3. ஸமாஜத்தில் சேரவேண்டிய கிரமம். 2—5—'31.

மேலே விவரிக்கப்பட்ட 2-வது பாராவையனுசரித்து நடப்பதற்கு இஷ்டமுள்ளவர்கள் இதனடியில் சொல்லப்பட்ட 4-வது பாரா அபேக்ஷாபாரத்தில் ஒப்பிட்டு அவர் ஏதேது ஆஸ்ரமத்தில் சேர உத்தேசிக்கின்றாரோ அவ்வாஸ்ரம பிரஸிடெண்டுக்கு அந்தப்பாரம் நேரிட்டுக் கொடுக்கவேண்டியதாகும்.

4. அபேக்ஷா பாரம். 2—5—'31.

அபேக்ஷாபாரத்தினுடைய வாசகம் இன்ன ஜில்லா, இன்ன தாலுகா, இன்ன கிராமம், இன்ன ஊர், இன்ன தெருவு அல்லது வீதி, இன்ன இடத்தில் வசிக்கின்ற இன்ன ஆள் அபேக்ஷித்துக்கொள்கிற விண்ணப்பம் :—

எனக்கு சுவாமி ஸ்ரீ சிவானந்த பரமஹம்ஸரால் ஸ்தாபிக்கப்பட்ட சித்த ஸமாஜத்தில் சேருவதற்குப் பிரீதி உள்ளதினால் ஸமாஜ நிச்சயப்படிக்கு நடப்பதற்குள்ள உடன்படிப்பத்திரம் என்னிடம் எழுதிவாங்கி என்னை ஐக்கிய ஜீவிதத்தில் சேர்த்து நடத்திக்கொள்ளவேண்டி அபேக்ஷிக்கிறேன்.

கையொப்பம்..

தேதி...

அப்பிரகாரம் கிடைத்த விண்ணப்பத்தை அனுசரித்து அந்த ஆஸ்ரம பிரஸிடெண்டு ஸமாஜத்தில் சேர்வதற்குள்ள அனுமதி கொடுத்தால் அந்த அங்கத்தைக்கொண்டு ஸமாஜ உடன்படிப் பத்திரத்தில் ஒப்பிடச் செய்யவேண்டியதுமாகிறது.

5. உடன்படிப் பத்திரத்தினுடைய வாசகம். 2—5—'31.

சித்த ஸமாஜத்தில் இப்பொழுது நடப்பில் இருக்கின்றதும் இனி அந்தந்தக் காலங்களில் ஏற்படுத்துகின்றதுமான சட்டங்

களுக்கனுசரித்து நடக்கிறேனென்றும் நடந்துக்கொள்கிறேனென்றும் இதனடியில் கையொப்பமிட்டிருக்கின்றவனுகிய நான் என் பூரண மனதால் உடன்பட்டு சமாஜத்தில் சேர்ந்திருக்கிறேன். ஆனுல் ஷை ஸமாஜ சட்டங்களுக்கு தவறுதலாக நடந்துக்கொண்டால் ஸமாஜத்திலிருந்து தீர்மானப்படுத்துகின்ற பரிகாரத்திற்கும் நான் உத்திரவாதியாகிறேன். அவ்விதம் நான் அதை அனுசரிக்காதபக்ஷம் உண்டாகின்ற எல்லாக் கஷ்ட நஷ்டங்களுக்கும் நானே உத்திரவாதி என்றும் சம்மதித்து இதில் கையெழுத்து செய்திருக்கிறேன்.

கையொப்பம்..

6. ஸமாஜத்தில் சேர்ந்தால் இருக்கவேண்டிய கிரமம். 2—5—'31.

மேல்ப்பிரகாரத்தில் ஸமாஜத்தில் சேருவதற்கு ஓர் அங்கத்தினுடைய கையிலிருந்து ஒரு உடன்படிப் பத்திரம் கிடைத்தால் அந்த அங்கத்தைக்கொண்டு அவ்வாஸ்ரம பிரஸிடெண்டு ஆஸ்ரம ரிஜிஸ்டரில் ஒப்பிடச்செய்து ஸமாஜத்தில் சேர்த்து சரியாக நடப்பிக்க வேண்டியது. அவர் கொடுத்த விண்ணப்பமும், உடன்படிப்பத்திரமும் மேற்பிரகாரம் அந்த அங்கத்தை சேர்த்தாய் விட்டது என்று ஒரு அடையாளம் வைத்து மேல் உத்தியோகஸ்தர்களுக்கு முன்பாக ஜெனரல் பிரஸிடெண்டவர்களுக்கு அனுப்பிக் கொடுக்கவேண்டியது. அவ்விபரம் ஜெனரல் பிரதிநிதிக்கும் ரிப்போர்ட்டுச் செய்யவேண்டியது.

7. ஸமாஜ ரிஜிஸ்டர். 2—5—'31.

அப்பிரகாரம் ஒப்பிடுகின்ற சமாஜ ரிஜிஸ்டரில் தலைக்கட்டில் எழுதியிருக்கின்ற 5-வது பாராவில் காண்பிக்கப்பட்டிருக்கின்ற உடன்படி வாசகத்திற்கு கீழே சமாஜத்தில் சேருகின்ற ஒவ்வொரு அங்கத்தினுடைய ஜில்லா, தாலூகா, ஊர், கிராமம், தெரு அல்லது வீதி, தகப்பன் பெயர், தாய் பெயர், வயது, கையொப்பு, சேர்ந்த தேதி என்ற கட்டங்களில் சேருகின்ற அங்கத்தைக்கொண்டு விபரங்கள் சேர்த்து ஒப்பிடச் செய்யவேண்டியது.

8. லாகிரி வஸ்துக்கள். 21—5—'21.

ஸமாஜத்தில் சேருகின்றவர்கள் சித்த வித்தை கிரஹிக்கும் பொழுது குரு காணிக்கையாக கொடுத்துள்ளதாகிய பீடி, சுருட்டு, சிகரெட், பொடி, கஞ்சா, அபின், கள், சாராயம் முதலிய யாதொரு வஸ்துக்களையும் உபயோகிக்கக்கூடாது.

9. புலாலுண்ணல். 22—11—'21.

அதுவும் தவிர அவர்கள் மேற்சொன்னதாகிய லாகிரி வஸ்துக்களோ கஞ்சா முதலிய புகை வஸ்துக்களோ மச்ச, மாம்ஸாதிகளாகிய பிணங்களோ, முட்டை முதலிய கருவோ சாப்பிடவும் கூடாது. அப்படி சாப்பிடக்கூடியவர்களோடு சகவாஸம் செய்யவும் கூடாது.

10. தைரியமும், பொறுமையும். 23—12—'21.

ஸமாஜத்தில் சேர்ந்தவர்கள் அவரவர்களாகவே இரண்டு ஆயுதங்களைத் தயார் செய்துகொள்ளவேண்டியது. அதாவது பீரங்கியின் குண்டானது தனக்கு எதிரே வந்தாலும் அதைத் தடுத்துவிடத்தக்க மஹா சக்தி பொருந்தியதான ஒரு கேடயமும், ஹிமயமலையே தடங்கலாக வந்தபோதிலும் ஒரே வெட்டினால் துண்டாக்கக்கூடிய அவ்வளவு கூர்மையான ஓர் வஜ்ஜிர வாளுமாகின்றது. அதாவது "தீரதை" என்ற கேடயமும், "க்ஷம" என்கிற வாளுமாகின்றது. தீரதை என்றால் தான் உத்தேசித்த காரியம் யாதொரு ஜீவிகளுக்கும் எவ்வித தொந்தரவும் கொடாமல் அக்காரியம் நிறைவேற்றுவதில் தனக்கு அதிக கடினமான உபத்ரவங்களுடன் தடஸ்தம் நேரிட்டாலும் அதை மதியாமல் இருப்பதாகும். அதாவது ராமதாஸ் என்பவருடைய வீட்டிற்குக் கிருஷ்ணதாஸ் என்பவர் போகவேண்டும். அதன் நிமித்தம் யாதொராளுக்கும் யாதொரு தோஷமுமில்லை. ஆனால் ராமதாஸனுக்கும், கிருஷ்ணதாஸனுக்கும் அன்யோன்யமான சிநேகமிருக்கக் கூடாதென்று சமீப வாசிகளுக்கு துர் விசாரம் உண்டாகியும், கிருஷ்ணதாஸர், ராமதாஸருடைய வீட்டிற்குப் போகும்பொழுது சமீபஸ்தர்கள் ஷெ துஷ்ட விசாரத்தால் கிருஷ்ணதாஸரைப்

பிடித்து அடிக்கவும் தள்ளவும் செய்கிருர்கள். அதற்குப் பதில் தள்ளுகையோ அடிக்குகையோ செய்யாமல் அவர்கள் தள்ளிய போது பின்னல் போனகாலை ராமதாஸருடைய வீட்டிற்குப் போக காலை முன்பக்கம் வைக்கிறதல்லாமல் அவருடைய சொந்த மன்தாலே காலைப் பின்னெடுத்து வைக்கக்கூடாது. இவைதான் தீரதை என்கின்ற கேடயத்தினுல் உள்ள உபயோகம். அச்சமயத்தில் ஏற்பட்ட அடிகளுக்கும் தள்ளுகளுக்கும் எவ்வித விசனமும் படாமல் ஸந்தோஷத்துடன் அனுபவிக்கின்றதுதான் க்ஷமா வென்கிற வாளினுல் வெட்டித்தள்ளுவதாகும்.

11. அனுச்சாரங்கள். 23—12—'21.

அவர் சுத்தா அசுத்தம், வீட்டு விலக்கு, தீண்டல்கள் முதலான அனுச்சாரங்கள் நிறுத்தல் செய்து ஜாதி வித்தியாச மில்லாமலிருக்கவேண்டியது.

12. பிதிர் பிண்டங்கள். 23—12—'21.

அவர் பிதிர் கிரியை என்றும், பிண்டம் வைப்பதென்றும் யுக்தியில்லாமலுள்ள கிரியைகளை நடத்தக்கூடாது.

13. மந்திர தந்திரங்கள். 23--12—'21.

அவர்கள் மந்திரவாதம் முதலான தந்திரங்களை விட்டுவிட வேண்டியது.

14. மாதவிடை (ருது). 22—1—'25.

ருதுவானல் விலக்கிவைக்கக்கூடாது. ஆனல் இந்துக்கள் என்று அபிமானித்து வருபவர்களிடத்தில் இந்த ஏற்பாடு நடந்து கொண்டு வருகிறது. அதானது அவர்கள் ஆலோசிக்காமல் செய்து வருகின்றதாகும். அவ்விதம் முகம்மதியர், கிருஸ்துவர் என்று அபிமானித்து வருகின்றவர்கள் இதை விலக்குகின்றதில்லை. இந்துக்கள் பலரும் மேல் சொல்லப்பட்டவர்களுடைய பலகாரங் களைப் பக்ஷித்து வருகிருர்கள். மேலும் அன்னிய தேசங்களில் தொட்டால் குளிக்கவேண்டியதில்லை, முகம்மதியரும்,

கிருஸ்துவரும் ருதுவான சமயத்திலும் தாராளமாய் அவர்கள் ஒருவரோடொருவர் தொட்டுக்கொள்கிறார்கள். அவ்விடங்களில் தீண்டல் காண்பதில்லை. இது நமக்குக் கொஞ்சமும் ஆலோசனை யில்லாததினால்தான் இப்பிரகாரம் செய்துவருகின்றது.

15. சாதாரண ருதுவானால் செய்யவேண்டிய கிரமம். 31—1—'25.

ருதுவானால் அத்தருணமே ஸ்நானம் செய்ய வேண்டியது. காரணம் என்னவென்றால் ருது என்ற வாக்கிற்கு புஷ்பிக்கிற தென்று அர்த்தமாகும். ஒரு மரம் புஷ்பித்தால்தான் காய் உண்டாகும். புஷ்பம் இல்லை என்றால் காய் இல்லை. இவ்வித மாகத்தான் ருதுவென்பது புஷ்பிக்கிறதாகும். அதற்குப்பிறகுதான் கெர்ப்பம் உண்டாகி சந்தானம் உண்டாகிறது. பூத்த சமயத்தில் ஒரு மரத்திற்கு தண்ணீர் விடுகின்றதானது குணமாகிறது. இப் பிரகாரம்தான் ருதுவானால் அந்தக்ஷணமே ஸ்நானம் செய்விக்க வேண்டியது.

16. முதலாவது ருதுவானால் செய்யவேண்டிய கிரமம். 31—1—25.

ஒரு ஸ்திரீ வயது நிறைந்து முதலாவது ருதுவானால் உடனே தலைக்குத் தண்ணீர் விடவேண்டியது. ஆனால் இவ்வித ஆசாரங்கள் இருப்பதாகக்கருதி ஒரு மூக்குச்செம்பினாலோ, அல்லது வேறு பாத்திரத்தினாலோ கொஞ்சம் தண்ணீர் தலைக்கு விடுகிறார்கள். ஆனால் அது சரிதான்; அதானது இப்பொழுது செய்து வருவது போலல்ல. செய்யவேண்டியது முதலாவது ருதுவான பெண்ணை ஓர் இடத்தில் உட்காரவைத்து 101 பாத்திரத்திற்கு குறைவாகாமல் கூடுமானவரையில் தலைக்கு ஜலம் விடுவதல்லாமல் மற்றவிதத்தில் செய்யக்கூடாது.

17. நாகரீக உடைகள். 11—2—'25.

ஸமாஜத்தில் சேர்ந்தவர்கள் யாதொருவித கலர் வஸ்திரங் களோ, வேஷங்களோ தரித்துக்கொள்ளக்கூடாது.

18. ஸ்தானப் பெயரும், ஜாதிப்பெயரும். 15—3—'25.

ஸமாஜத்தில் சேர்ந்தவர்கள் அவரவர்களுடைய பெயர்களை மாத்திரம் சொல்லிக்கூப்பிடுவதல்லாமல் வேறே யாதொரு ஜாதிப் பெயரோ, ஸ்தானப்பெயரோ மற்ற எவ்வித நாமதேயங்களோ சொல்லிக்கூப்பிடக்கூடாது.

19. புதிய நாமதேயங்கள். 15—3—'25.

குழந்தையில் கூப்பிடப்பட்ட பெயரோ அல்லது அவனவனுடைய அனுபவத்தில் அனுசரித்து உண்டான பெயரோ அல்லாமல் வேறு ஏதாவது பெயர்கள் உண்டாக்குவதோ கூப்பிடுவதோ கூடாது.

20. அன்யோன்யம் கூப்பிடவேண்டிய கிரமம். 8—10—'25.

ஸமாஜத்தில் தகப்பனைத்தவிர வயது மூத்தவர்களை அண்ணன், அக்காள், மாமா, அம்மா, பெரியம்மா என்றும்; தனக்குக் கீழ் வயதுடையவர்களை பெயர் மாத்திரம் சொல்லி கூப்பிடவேண்டியது.

21. அலங்காரங்கள்: 3—4—'25.

ஸமாஜத்தில் சேர்ந்தவர்களுக்கு வஸ்திர அலங்காரமல்லாமல் வேறு எவ்வித ஆபரண அலங்காரங்களும் அணிந்துகொள்ளக் கூடாது. அவ்வித அலங்காரங்கள் ராஜஸ குணமாகும். அவ்வித விர்த்தி ஸமாஜத்தில் கூடாது.

22. கொண்டாட்டங்கள். 15—3—'25.

ஸமாஜத்தில் விவாகமும், குழந்தைகளுக்கு முதலாவதாக சாப்பாடு (சோறு ஊட்டுவது) கொடுக்கின்றதுமாகிய கொண்டாட்டங்களல்லாமல் வேறு யாதொரு பண்டிகைகளும் கொண்டாடக் கூடாது. ஆனல் 28—8—'31உ முதல் ஸமாஜ ஜெனரல் பிரஸிடெண்டினல் நடப்பில் வருத்தியிருக்கின்றதும், முன்பு மலையாள தேசத்திலேயே நடப்பிலில்லாததும்,இப்பொழுது ஷிமலையாளத்திலும், மற்ற தமிழ் நாடுகளிலும் பிரதேசங்களிலும் நடந்துவருகின்

ரதுமான அந்தந்த வருஷத்திலுள்ள கார்த்திகை மாசத்தில் அதாவது விருக்ஷிக மாசத்தில் கார்த்திகை தினங்களில் நடந்து வருகின்ற கொண்டாட்டம் நமது (சுவாமிகளுடைய) ஜென்ம நட்சத்திரமானதால் அந்தக்கொண்டாட்டமும் வருஷத்தில் சேருவதற்கு இஷ்டப்படுகின்ற பொது ஜனங்களோடு கூடி நடத்த வேண்டியதாகும்.

23. ஆகார வியாபாரங்கள். 15—3—'26.

சித்த ஸமாஜத்தில் உள்ளவர்கள் யாதொரு விதத்திலுள்ள ஆகார வியாபாரங்களும் செய்யக்கூடாது. அதாவது ஹோட்டல் பலகாரங்களும், காப்பி, டீ முதலிய பான வகைகளும் ஆகிய வியாபாரங்கள் செய்யக்கூடாதென்றாகிறது.

24. பிரிந்தவர்களின் விண்ணப்பம். 16—8—'25.

ஸமாஜத்திலிருந்து பிரிந்தவர்களுக்கு ஸமாஜக்காரர் யாதொரு விண்ணப்பமும் எழுதிக்கொடுக்கக் கூடாது.

25. சாக்ஷி. 15—12—'25.

ஸமாஜக்காரர்கள் அனுவசியமாய் ஆஸ்ரமம் விட்டு வெளியில் போகவோ, அதல்லாமல் கலகம் உண்டாகிற ஜனக்கூட்டங்களில் போய் சாக்ஷிகள் சொல்லுவதற்குத் தகுந்த முகாந்திரங்கள் ஏற்படும்படி செய்துகொள்ளவோ கூடாது.

26. கிரிமினல் கேஸ். 28—7—'26.

சித்த ஸமாஜக்காரர்கள் யாதொருவருடைய பேரிலும் கிரிமினல் கேஸ் கொடுத்து அவரைத் தண்டிக்கும்படி செய்யக் கூடாது. அவரைவேறொருவர் தண்டிக்கவேண்டிய அவசியமுமில்லை. அவருக்கு அவருடைய காரியம் சாத்தியமானால் போதும்.

27. பிறர் நிந்திப்பும், ஆக்ஷேபணைகளும். 31—8—'24.

அன்னியர்கள் நம்மைப்பற்றியோ, ஸமாஜத்தைப்பற்றியோ, வர்த்தமானப்பத்திரம் (பேப்பர்) மூலமாகவோ, வேறு எவ்விதத்திலேனும் தூஷணையாகச் சொல்லும்பொழுதோ, எழுதும்பொழுதோ

அதற்குப் பிடிவாதமாகவோ, பதிலாகவோ, யாதொன்றும் சொல்லவோ, எழுதுவதோ கூடாது. அவர்கள் நம்முடன் நேரில் வந்து கேட்டால் பதில் கொடுக்கப்படும். அதல்லாமல் தர்க்கத்திற்கோ, கேள்விகளுக்கோ போகக்கூடாது.

28. அன்னிய சங்கங்கள். 23—7—'31.

சித்த ஸமாஜக்காரர்கள் வேறு எவ்வித சங்கங்களிலும் போய் சேரவோ, அதில் சேர்ந்து அதன் நடவடிக்கைகளை நடத்தவோ கூடாது.

29. அன்னியருடைய ஆக்ஷேபங்கள். 8—7—'26.

அன்னியர்கள் ஸமாஜத்திலுள்ள விபரங்களை ஏதாவது தெரிந்துகொள்வதற்கு வேண்டி அபேக்ஷா கடிதங்கள் கொடுத்தால் அவைகளைப் பெற்றுக்கொள்ளக் கூடாது. ஆவசியமுண்டானால் அதிகாரம்பெற்றிருக்கிற கவர்ண்மெண்ட் உத்தியோகஸ்தர்கள் தெரிவித்தால் மாத்திரமே பதில் கொடுக்க வேண்டியது.

30. அன்னியரோடுள்ள ஏற்பாடுகள். 24—10—'24.

ஸமாஜத்தில் அன்னியரால் வேண்டி வருகின்றதான எல்லா ஏற்பாடுகளும் மேல் உத்தியோகஸ்தருக்கு விபரம் கொடுத்து முன்னதாகவே அனுமதி வாங்கிக்கொள்ள வேண்டியது.

31. மனக் கிலேசமும், ஜட தண்டனையும். 2—6—'25.

யாதொரு அங்கமும் எவ்விதத்திலும் மனதைப் புண்ணுக்குவதோ, ஜடத்தை தண்டனை அடையச் செய்யவோ கூடாது.

32. ஸந்நியாசமும், மௌனமும். 7—1—'26.

ஸமாஜத்திலிருந்து ஹெட்டாபீஸினுடைய அனுமதியில்லாமல் சன்யாசியாகவோ, மௌனியாகவோ இருக்கவோ சஞ்சரிக்கவோ கூடாது. காரணம் சந்நியாசி என்றால் சர்வ சங்கங்களையும்விட்டு யாதொன்றையும் அறியாமல் தன்னுடைய ஜீவனையும் மனதையும் ஒன்றாகச்சேர்த்து குண்டலினி சக்தியை

உணரச்செய்து சிவனுக இருக்கின்றதாகும். மௌனமென்ருல் மனேமௌனமாகும். அதாவது மனதை யாதொன்றிலும் பிரவேசப்படுத்தாமல் அடக்கம் செய்து தன்னுடைய பிராண வாயுவுடன் சேர்த்து, தன்னிலிருந்து ஆவி ரூபமாகி புகைந்து கொண்டிருக்கின்ற அக்னி சொரூபமாகிய சுக்கிலத்தை புகைக்க விடாமல் தன்னுடைய உள்ளில்கூடி சஞ்சரிக்கச் செய்து தன்னி லேயே ஸ்திதி செய்யப்படுவதாகும் மௌன விர்த்தி. இதல்லாமல் மற்ற யாதொரு விதத்திலுமுள்ள மௌனமும், சந்நியாசமும் ஸமாஜத்தில் அனுமதிப்பதில்லை.

33. அன்னியர் சகவாசம். 23—12—'21.

ஸமாஜ அங்கங்கள் அன்னியர்களோடு யாதொரு விதத்திலும் சகவாசம் செய்யக்கூடாது. அவ்விதமுள்ள அனுவசியப் பழக்கங் களினுல் ஸமாஜத்திற்கு துஷ்பெயர் உண்டாகின்றதற்கு இடங் கொடுக்கக்கூடாது.

34. அன்னியருடைய அபிப்பிராயங்கள். 15—3—'25.

அன்னியருடைய வாக்குகளையும் எவ்வித அபிப்பிராயங் களையும் ஸமாஜத்தில் எடுத்துக்கொள்ளக்கூடாது.

35. அன்னியருடைய அதிகாரங்கள். 1—8—'25.

ஸமாஜத்தில் உள்ளவர்கள் யாதொன்றிலும் அன்னியர் களுக்கோ அவருடைய அதிகாரங்களுக்கோ அடிமைப்படக் கூடாது.

36. அன்னியரின் தயையும், இஷ்டமும். 10—3—'30.

ஸமாஜத்தில் சேர்ந்தவர்கள் அன்னியர்களை பயப்பட்டோ அவர்களுடைய இஷ்டத்துக்கோ அனுசரித்து யாதொன்றும் செய்யக்கூடாது. ஸமாஜகாரியமாய் ஏதொன்று செய்தாலும் சத்தியமாயும், நியாயமாயும், யுக்தியோடும் கூடி தீரதையுடன் செய்யவேண்டியது.

37. அன்னிய ஸ்திரீகள். 19—7—'26.

ஸமாஜத்தில் இல்லாத ஸ்திரீகளோடு கூடி யாதொருவிதத்திலும் சகவசிக்கக்கூடாது.

38. அன்னியரைப்பற்றியுள்ள ரிப்போர்ட்டுகள். 15—12—'24.

ஸமாஜத்தில் இல்லாதவருடைய காரியத்தைப்பற்றி ரிப்போர்ட்டு செய்யக்கூடாது.

39. அன்னியருடைய சாதனங்கள். (பொருள்கள்) 6—9—'25.

அன்னியர்கள் அவரவருடைய பூரண மனதாலே ஏதாகிலும் ஆஸ்ரமத்திற்குத் தருவதுண்டானால் அதை அவர்கள் ஆசிரமத்தில் கொண்டுவந்து சேர்ப்பித்தால் பெற்றுக்கொள்ளுகின்றதல்லாமல் அவர்களுடன் ஆவசியப்படுவதோ அவருடைய இஷ்டத்திற்கு ஏதாவது ஒரு காரியமாய்ப் போனால் அவர் நாணயமல்லாமல் மற்ற எந்த வஸ்துக்கள் கொடுத்தாலும் வாங்குவதோ கூடாது.

40. விவாகம். 23—12—'21.

ஸமாஜ அங்கங்களுக்கு ஸமாஜத்திலிருந்தல்லாமல் வேறு எவ்வித ஜாதி மதஸ்தர்களிடத்திலிருந்தும் விவாகம் நடத்தக்கூடாது.

41. ரோக சிஷ்ருசை. 13—4—'25.

ஸமாஜத்தில் ஏதாவது ரோகங்கள் உண்டானால் எல்லா அங்கங்களும் எல்லா சமயங்களிலும் மிக ஊக்கத்தோடுகூடி பணிவிடை செய்ய வேண்டியதும், ரோகிகளுக்கு யாதொரு விதத்திலுள்ள வியாகூலத்திற்கும் இடம் கொடுக்காமலிருக்கவும் வேண்டியது.

42. ஸமாஜத்திலிருந்து விலகியவர்களோடுள்ள சகவாசம். 16-7-'25.

ஸமாஜத்திலிருந்து சுயஇஷ்டப்பிரகாரம் போனவரோ, ஸமாஜத்திலிருந்து அக்கிரமம் செய்துப் போனவரோ வந்தால் யாரும் அவருடன் எந்தவிதத்திலும் சகவசிக்கக்கூடாது. அப்பிரகாரம் வந்தால் அவருக்கு ஆகாரம் வேணுமென்று ஆவசியப்

பட்டால் ஆகாரம் கொடுத்து அவரை உடனே ஆஸ்ரம ஸ்தலம் விட்டு அனுப்பவேண்டும்.

43. முன் பந்தங்கள். 5—5—'26.

ஸமாஜ அங்கங்கள் அவர்களுக்கு ஸமாஜமல்லாமல், சொந்த வீடு இருக்கின்றதான விசாரத்தோடு கூடியோ, அங்குபோய் வாசம் செய்யவேண்டு மென்றுள்ள ஆசையுடனோ, அப்பிரகாரம்போய் சிலநாள் வாசம் செய்யவேணுமென்று ஆவசியப்படுகின்றவர்களை ஸமாஜத்தில் வைத்திருக்கக்கூடாது.

44. உத்தரவின்றி வெளியில் தாமதம். 3—4—'25.

ஸமாஜ அங்கங்கள் அவர்களுடைய மேல் உத்தியோகஸ்தர்களிடத்திலிருந்து அனுமதியில்லாமலும் ஸமாஜ சம்பந்தமான காரியங்களில்லாமலும் ஸமாஜ ஸ்தலம்விட்டு வெளியில்போய் ஒருநாளாகிலும் வசித்திருந்தால் அவர்களை மறுபடியும் ஆஸ்ரமத்தினுள்ளில் விடாமலும், அங்கங்களுடன் சேர்க்காமலும் நிறுத்தி வைக்கவேண்டியது.

45. ஜாதி மதம். 30—11—'24.

ஸமாஜத்திலுள்ளவர்கள் ஒரே மதஸ்தர்களும் ஒரே ஜாதிக்காரர்களுமாகின்றனர். தான் முன்பு இன்ன மதஸ்தனுயிருந்தது, இன்ன ஜாதியாயிருந்தது என்றபிமானிக்கவோ, நடிக்கவோ, சொல்லவோ கூடாது. அவர்களுடைய மதம் ஈஸ்வர மதமும், ஜாதி மனிதனுமாகும்.

46. நல்வழிக்குள்ள பிரயத்தனம். 23—7—'31.

உலகத்தில் யாதொருவன் அன்னியதோஷங்களையும் அன்னியர்களுடைய தொழில்களையும் நினைவுறாமல், தன்னுடைய தொழிலையும், தன்னுடைய தோஷத்தையும் சிந்தனை செய்து தான் தன்னே உண்டாக்குகின்ற அற்ற குற்றங்களையும், அஜாக்ரதைகளையும் நிவர்த்தித்துக்கொண்டு மேலும் யாதொரு அஜாக்ரதையும், தவறுதலும் ஏற்படுத்திக் கொள்ளாமலிருப்பதற்கு

வேண்டி சிரத்தையோடுகூடி ஒரே விஸ்வாசத்தில் வேலை செய்கின்றவன்தான் உத்தமனும், சிரேஷ்டனும், ஈஸ்வரத்துவம் உடையவனுமாகிறான்.

47. லௌகீக ஏற்பாடுகள். 1—8—'26.

சித்த ஸமாஜஸ்தர் ஆத்மீகமுடையவராவர். அவர் தன்னுடைய தொழில்களெல்லாம் ஸதா சமயத்திலும் ஆத்மீகத்திலேயே நடத்தியும், ஸ்தாபிக்கவும் வேண்டியது. தன்னால் உலகத்தில் யாதொரு விரோதமும் கூடாது. லௌகிக காரியங்களில் ஈடுபட வேண்டி வந்தால் தான்உலகத்தோடு சேர்ந்து தனக்குயாதொன்றிலும் பாத்தியதையில்லாமலும், தன்னுடைய காரியத்திற்கும் நிச்சயத்திற்கும் அணுவளவேனும் வித்தியாசம் வாராதபடிக்கும், தன்னுடைய எதார்த்த அவஸ்தையை உலகர்க்கு கிரஹிக்கும்படி செய்து அவர்களை சந்தோஷப்படுத்தி, தன்னுடைய ஆத்மீக அவஸ்தையைத்தான் ஸ்தாபிக்க வேண்டியது.

48. ரகஸ்ய சம்பாஷணைகள். 23—12—'25.

ஸமாஜத்திலுள்ள அங்கங்கள் ஒருவரோடொருவர் யாதொரு வித ரகசியங்களும் பேசக்கூடாது. அவ்விதம் செய்கின்றது ஸமாஜத்தில் பெரிய குற்றமாகும். அது என்னவென்றால் மற்றுமுள்ள அங்கங்களுக்கு சந்தேகமுண்டாகி கலகத்திற்குக் காரணமுண்டாகின்றதாகும்.

49. ரகஸ்யக் கடிதங்கள். 15—12—'25.

ஸமாஜத்தில் சேர்ந்தவர்கள் யாதொரு ரகஸ்யக் கடிதங்களும் அனுப்பவோ, வாங்கவோ கூடாது.

50. அன்னியோன்யக் கடிதப் போக்குவரத்து. 23—7—'31.

ஸமாஜத்திலிருக்கின்றவர்கள் ஒருவரோடொருவர் எவ்வித கடிதப் போக்குவரத்துக்களும் செய்யக்கூடாது.

51. அன்னியோன்ய கட்டுப்பாடு. 23—7—'31.

ஸமாஜத்தில் சேர்ந்தவர்களுக்கு அன்னியோன்யம் யாதொரு பிரத்தியேக கட்டுப்பாடுகளும் கூடாது. அதுவும் பெரிய குழப்பத்திற்கு இடம் உண்டாகும்.

52. கர்ப்பிணிகள். 4—3—'25.

ஸமாஜத்திலுள்ள கர்ப்பிணிகளுக்கு பிரசவத்திற்கு குணகரமாயுள்ள வேலைகள் எதுவோ அதையே செய்யச் சொல்லவேண்டியதாகும். அவர்களுடைய பேரில் பிரத்யேக கவனம் செலுத்திக்கொண்டிருக்கவும் வேண்டியது.

53. குரோதம். 14—4—'25.

ஸமாஜத்தில் சேர்ந்தவர்கள் எவ்வித குரோதத்தோடும் நடந்து கொள்ளக்கூடாது. குரோதம் எமனாகிறது. அதானது நாசமுமாகின்றது.

54. பயம். 14—12—'24.

பயமுள்ளவர்களை ஸமாஜத்தில் சேர்க்கக்கூடாது. ஸமாஜத்திலுள்ளவர்கள் யாதொரு ஜீவிகளைக்கண்டாலும் பயப்படக்கூடாது. பயத்தினால்தான் நாசத்தை உண்டாக்குகிறதும் ஏற்படுகின்றதுமாகும். அதென்னவென்றால் அன்னியோன்ய பயம் உண்டாகும் போது அன்னியோன்யம் நாசப்படுத்துவதற்கு துணிவு உண்டாகிறது. ஆனதினால்தான் உலகத்திலுள்ள குழப்பம். ஒரு ஜீவி நம்மை உபத்ரவம் செய்வதானது, நாம் அதற்கு உபத்ரவம் செய்வோம் என்ற பயத்தினாலாகும். நாம் அதனை உபத்ரவம் செய்கின்றதானது அது நம்மை உபத்ரவம் செய்யுமென்றுள்ள பயம் நிமித்தமாகும். ஆகையினால் எவரும் யாதொன்றினோடும் பயப்படாமல் ஐக்கியப்பட வேண்டியதாகும். நாம் அவைகளோடு ஐக்கியப்படும் பொழுது அவைகள் நம்முடன் ஐக்கியப்படும். எப்பொழுது உலகத்தில் பயம் தீருகின்றதோ அன்றே உலகம் சாந்தி அடையும். அச்சமயமே ஐக்கியமுண்டாகின்றதுமாகும். அதனால் உலக சாந்திக்காக முயற்சிக்கின்றவர் எவரோ அவர் முக்கியமாய் பயத்தையே விடவேண்டியதாகும்.

55. சிநேகம். 23—7—'31.

ஸமாஜத்திலுள்ளவர்கள் மற்றவரை சிநேகம் செய்யக்கூடாது. அவ்விதம் சிநேகம் செய்தால் விரோதம் உண்டாகும். அவ்விரோ

தத்தால் நாசமும் ஏற்படுவதாகும். அதனால் எவரும் அன்னியோன்யம் நேசிக்கக்கூடாது.

56. பெருமையும், கோர்வமும். 23—7—'31.

ஸமாஜத்தில் யாதொரு அங்கத்திற்கும், உத்தியோகஸ்தருக்கும், எவ்விதத்திலுள்ள கொர்வமோ, பெருமையோ கொள்வது கூடாது. அவ்விதம் உள்ளவர்களை ஸமாஜத்தில் வைத்துக்கொள்ளக்கூடாது.

57. ராகத்துவேஷ செய்கைகள். 23—7—'31.

ஸமாஜத்தில் ராகத்துவேஷாதி நடவடிக்கைகள் உண்டானால் பலவிதத்திலுள்ள கஷ்டங்களும் அதாவது தாரித்ரியமும் (பஞ்சம்) மஹா வியாதி முதலியவைகளும் அனுபவிக்க இடமுண்டாகும்.

58. சத்யாக்ரஹம். 13—9—'25.

உலகத்தில் கிருத்தியம் இல்லாததுகொண்டு சத்தியம் நசித்துப் போயிருக்கின்றது. ஆனதினால் நியாயம் என்கிற மண்ணையும், மரியாதை என்கிற தண்ணீரையும் கூட்டிச்சேர்த்தரைத்து கிருத்தியம் என்று சொல்லப்பட்ட கல்லை வைத்துக்கட்டி சத்தியம் என்று சொல்லுகின்ற கிரகத்தை உண்டாக்கி அந்தக் கிரகத்தில் எல்லோரையும் ஒதுக்கி வசிப்பதற்காக வேண்டி எத்தனம் செய்ய வேண்டியதாகும்.

59. சமத்துவம். 10—3—'30.

சித்த ஸமாஜத்தில் புதிதாக ஓர் அங்கம் சேர்ந்தால் அந்த அங்கத்தை அச்சமயம் முதற்கொண்டு எல்லாவர்க்கும் சமமாகவும் சுதந்திரனாகவும், நடத்திக்கொள்ள வேண்டியது. ஸமாஜத்தில் பெரியவன் சிறியவன் என்ற ஓர் அவஸ்தையில்லை. தேவையில்லாமல் ஒருவரை மற்றொருவர் மதிக்கவேண்டியதில்லை.

60. சுவாதந்திரியம். 17—1—'30.

நாம் ஸமாஜம் ஸ்தாபித்திருக்கின்றது, உலக நன்மைக்கும் உலக ரக்ஷைக்கும் வேண்டியாகும். அதானது ஏதுப்பிரகாரமென்ருல் அன்னியரை அடிபணிதல் கூடாமலும், வேலை செய்து சுதந்திரனுகி அன்னியருக்கு அடி பணியாமலும் ஐக்கியமாய் நடப்பதற்கு வேண்டியாகும். சுவாதந்திரியமென்ருல் அவனவனுக்கு தோன்றுகிற விதத்தில் நடக்கின்றதல்ல. நியாய அநியாயங்களை ஆலோசித்து அநியாயத்தை நீக்கி நியாயத்தை மாத்திரம் பலப்படுத்தி அந்த நியாயத்தை வேறொருவராலும் ஜெயிப்பதற்கு முடியாத விதத்தில் திடமாய் ஸ்திரப்படுத்தி சத்தியத்தை மாத்திரம் நிலைநிறுத்தி அதைக்கொண்டு ஜெயித்து நிலை நிறுத்துகின்றவர்களாகும் சுவாதந்திரிய ஜீவிகள். இதற்குத்தான் சுவாதந்திரியமென்றுரைப்பது. அங்ஙனமிருக்கும்பொழுது நம்முடைய நியாயத்தை எவருக்கும் மறைப்பதற்கோ, ஜெயிப்பதற்கோ நிவர்த்தியில்லாமலிருக்கும். அத் தருணத்தில் இதுதானுகும் நியாயம், இதாகும் சத்தியம், இவ்விதம்தான் நாம் நடந்துகொள்ளவேண்டியதும் உலகத்தில் ஸ்தாபிக்க வேண்டியதென்றும் உலகத்தாருக்குத் தெரியவரும். அந்த வழியாக அவர்களும் மேன்மைக்கு வர இடம் உண்டாகும். அப்பொழுது உலகத்திற்கு க்ஷேமமும், ரக்ஷையும் ஏற்படுவதாகும். இதல்லாமல் நாம் உலகத்தோடு வெறுத்ததினுலோ, தூஷித்ததினுலோ, பிரசங்கம் செய்ததினுலோ யாதொரு பயனுமில்லை. பலன் வேண்டுமென்ருல் தொழில் செய்யவேண்டும். தொழிலினுலே தான் பலனுண்டாகும். அதனுல் நாம் உலகம் நிலைநின்று வருவதற்குள்ள எல்லா வேலைகளும் செய்துவர வேண்டியதாகும்.

61. கோள் சொல்லலும், துவேஷமும். 23—10—'27.

பொய்ப் பிரசாரங்கள் நிமித்தமாகவே உலகத்தில் கலகம் உண்டாகின்றது. அதனுல் மற்றவர் சொல்லும் வார்த்தைகளை விஸ்வசிக்கவேண்டாம். சொல்லுகின்றவர் நேரில் சொல்ல வரும்பொழுது அனுபவித்தறிந்து வேணுமென்ற விதத்தில் செய்துக்கொள்ளலாம். இதல்லாமல் மற்றவர்களுடைய வார்த்தையைக்

கேட்டு கோபப்படுவதோ, ஏதாவது செய்வதோ கூடாது. ஒரு கோபத்திற்கு 10 கோல் ஆழமுள்ள ஓர் கிணற்றில் குதித்தால் அதே விதத்தில் ஒரு லக்ஷம் கோபம் ஒன்ருகி வந்தாலும் ஒரே பாய்ச்சலுக்குள் மேலே வந்து சேருவதற்கு சாத்தியப்படுவதில்லே. கேட்பதற்கு ஆள் உள்ளதினுல் தான் சொல்லுவதற்கு இடமுண்டாகிறது. ஆனதினுல் யாதொருவரும் மற்ருெருவரைப்பற்றி அனுவசியமாய் ஒரு சொல்லாகிலும் அவனவனேடு சொல்ல இடங் கொடுக்கக்கூடாது.

62. பழய ராகத்துவேஷ செய்கைகள். 15—3—'35.

முன்பு நடந்துபோன காரியங்களே மறக்காமல் மீண்டும் ஒளித்து வைத்து ராகத்துவேஷமாகி நடந்து ஸமாஜத்தில் கலகமுண்டாக்குகிறவர்கள் குருப்பிரஷ்டர்களாகும்.

63. வெளி விவகாரங்கள் முதலியவை. 30—11—'24.

ஸமாஜத்திலிருந்து அன்னியருடைய வார்த்தைகளேயும், கோர்ட்டு (நியாயஸ்தலம்) விவகாரங்களேயும் மற்றும் பேசக்கூடாது. ஸமாஜம் யாவருக்கும் அன்னிய உதவியில்லாமல் வேலே செய்து உபஜீவனம் நடத்தி ஈஸ்வர சேவை செய்ய வேண்டி இருக்கின்றதாகும்.

64. ஸமாஜத்தில் ஜீவிக்க இஷ்டமில்லாதவர். 3—4—'30.

ஸமாஜத்திலிருப்பதற்கு இஷ்டமில்லாதவரை ஸமாஜத்தில் வைத்துக்கொள்ளக்கூடாது. அவ்விதமுள்ளவரை ஸமாஜத்தில் வைத்திருந்தால் பல கஷ்ட நஷ்டங்களும், அதிக தீங்குகளுமுண்டாக இடமாகும். ஆனதினுல் அவருக்கு எந்தயிடத்திற்குப் போக இஷ்டமிருக்கின்றதோ அவ்விடத்திற்குப் போய் சேர வேண்டிய சிலவுக்குப்பணம் கொடுத்து விண்ணப்பம் வாங்கி பிரித்தனுப்பவேண்டியது.

65. பகல் உறக்கம். 24—1—'30.

ஸமாஜத்தில் அஜீரணம், காலரா, முதலிய வியாதிகள் பீடிக்கப்பட்டு ரொம்பவும் கஷ்டமடைந்து படுக்கையிலேயே யிருக்கின்ற

வியாதியஸ்தர்கள் தவிர வேறு யாதொரு அங்கங்களும் பகலில் படுத்து உறங்கக்கூடாது. பகலில் படுத்து தூங்குவதினுல் விகாரம் ஜாஸ்தியாகியும், நாடிகளுக்குப் பலமும் குறைந்து க்ஷீணம் (சோர்வு) அதிகமாகியும், பித்தம் அதிகரித்து மகாரோகத்திற்குக் காரணமாகித் தீர்ந்துவிடச்செய்யும். ஆகையால் பகலில் படுத்து உறங்கக்கூடாது. அப்படிஉறங்குகின்ற அங்கங்களை வேறுபடுத்தச் செய்து மற்றவர்களுடன் சகவாசம் செய்ய அனுமதிக்கக்கூடாது.

66. ஸமாஜத்திலுள்ள குழந்தைகள். 23—7—'31.

ஸமாஜத்திலுள்ள எல்லாக்குழந்தைகளையும் அவரவர்களுடைய தாய் தந்தையர்களிடமிருந்து பிரசவித்த (பெற்ற) மூன்று வருஷம் சென்ற உடனே பிரித்து வேரே ஆஸ்ரமத்தில் வசிக்கச் செய்து வேண்டிய ரக்ஷைகளும் செய்யவேண்டியது. பிரசவித்த மூன்று வருஷங்கள் முடிந்த உடனே குழந்தைகளை தாய்ப்பால் குடியினின்று நிறுத்தவேண்டும்.

67. குழந்தைகளுடைய உத்தரவாதங்கள். 23—7—'31.

தாய் தந்தையர்கள் பிரியும்பொழுது அவருடன்கூட குழந்தைகளை அனுப்பிக்கொடுக்கக்கூடாது.

68. குழந்தைகளின் ஜீவிதம். 6—4—'26.

ஸமாஜத்தில் குழந்தைகளுடன் கொஞ்சக் (முத்தம்) கூடாது. அவர்களிடமுள்ள சிநேகத்தை உள்ளிலடக்கி அன்னியரைப்போல் அவர்களோடு நடந்துகொள்ளவேண்டியது. அவர்களுக்குத் தனியாக பாடசாலைகள் ஏற்படுத்தி சர்வகலாவித்தைகளையும் அப்பியாசப்படுத்திக் கொடுக்கவேண்டியது. அவர்களை யாதொரு ஆவஸ்யத்திற்கும் அன்னிய இடங்களுக்கு அனுப்பவோ, அன்னியர்களோடு பழகவோ அனுமதி கொடுக்கக்கூடாது. அவரை யாதொரு விதத்திலும் வியாகூலப்படுத்தவும்கூடாது.

69. ஸ்திரீகளுடைய ஜீவிதம். 29—3—'29.

ஸமாஜத்திலுள்ள ஸ்திரீகளை ஆஸ்ரம இடம் விட்டு வெளியில் யாதொரு தொழிலுக்கும் அழைத்துக்கொண்டு போகக்கூடாது.

ராஷ்ட்ரீகமாகவும், (ராஜீயம்) ஆத்மீகமாகவுமுள்ள எல்லா விஷயங்களையும் அறிந்திருக்கும்படி செய்யவேண்டியது. அவர்கள் சாயங்காலம் (6) ஆறு மணிக்கு முன்பதாகவே ஸ்நானம் செய்து ஆஸ்ரமத்திற்குள் செல்லவேண்டியது. ஆறு மணிக்குப் பின் ஸ்திரீகளுக்கு வெளியில் வேலையில்லை.

70. பாரியை. 26—9—'29.

ஒரு ஸமாஜஸ்தன் ஏகபத்னி விரதமாயிருக்கவேண்டியது. அதாவது ஒரு பத்னி இருக்கும்பொழுது இரண்டாவது ஒரு விவாகம் செய்யக்கூடாது.

71. மனைவியுடன் சேருவதற்குள்ள கிரமம். 30—7—'30.

பத்தினி எதற்காகவென்றால் விகாரம் சகிக்காமல் வரும் பொழுது அந்த விகாரம் தீர்ப்பதற்காக வேண்டியுள்ளவளாகும். ஆனாலதற்கு ஒரு கிருத்தியம் உண்டாயிருக்கவேண்டியது. அதாவது மாதத்தில் ஒரு தடவையென்றொரு வைராக்கியம் இருக்க வேண்டும். ஒரு வருஷத்தில் இரண்டு புணர்ச்சை செய்தால் அது பலனுடையதாகித் தீருகிறதாகும். இதினால் அவனவனுடைய ஆயுளுக்கும் கேடு இல்லை.

72. பாரியாளோடுள்ள சம்யோகம். 30—11—'30.

ஸமாஜத்தில் பர்த்தா பத்தினி இவர்கள் இரண்டுபேருக்கும் விகாரம் சகிக்கமுடியாமல் வருகின்ற சமயத்தில் வெளிப்படையாக ஆஸ்ரமத்தில் சயனத்திற்குத் தனியாக ஏற்படுத்தியிருக்கின்ற அறையில் பிரவேசித்து புணர்ச்சியை முடித்துக்கொண்டு உடனே அவரவர்கள் ஒருவரோடொருவர் பேசாமலும் தனித் தனியாக ஸ்திரீ, ஸ்திரீகள் படுத்துக்கொண்டிருக்கின்றயிடத்திலும் புருஷன், புருஷர்கள் படுத்துக்கொண்டிருக்கிற யிடத்திலும் சென்று படுத்துக்கொள்ளவேண்டியது. அவ்விதம் செய்யாமல் பர்த்தா, பத்னிகளென்று நினைத்து எல்லா சமயமும் ஒன்றாய்க் கூடிப்படுக்கவோ, ஆங்காங்கு வைத்து ஒருவரோடொருவர் ரகசியங்கள் பேசவோ செய்யக்கூடாது.

73. சதிபதிகளின் நிலைமை. 2—6—'25.

இவர்கள் பர்த்தா பத்தினிகளாக கூடிச் சுகமனுபவிக்கின்ற சமயத்தில் மாத்திரம் பர்த்தா பத்னி என்ற நிலையிலும் மற்ற எந்த நேரத்திலும் சகோதரபாவத்துடன் நடந்துகொள்ளவேண்டியது.

74. சிரேஷ்ட ஸந்தானத்திற்குள்ள முறை. 23—7—'31.

உலகத்தில் புணர்ச்சை என்பது இன்னுவசியத்திற்கென்று தெரிந்து கொள்கிறதில்லை. ஆனால் ஜனங்கள் புணர்ச்சையை இன்னுவசியத்திற்கென்று தெரிந்துகொள்ளாமல் தன்னுடைய ஒரு விகாரத்தை மாத்திரம் நாசம் செய்யவேண்டி ஒரு பைத்தியகாரச் செய்கையாகி அனுவசியமாய் பலவிதத்திலும் தன்னிலிருக்கின்ற இந்திரியத்தை (சுக்கிலம்) நாசம் செய்து தன்னிலிருக்கின்ற ஜீவனை யிழந்துகொண்டு வருகிறார்கள். "சம்யோகம்" என்பது உலகம் நாசமடையாமல் இருப்பதற்கு வேண்டியதாகும். அதாவது புணர்ச்சியில்லையானால் சந்தானம் உண்டாகிறதில்லை. யாவர்க்கும் சந்தானம் இல்லாவிடில் உலகம் இல்லை. சந்தானம் உண்டாக வேணுமென்றால் இந்திரியம் முதிரவேண்டும். முதிர்ந்த விதை விதைத்தால்தான் சரியானபடி முளைக்கவும், பலன் கிடைக்கவும் செய்யும். முதிராத விதை விதைத்தால் சரியான முளையோ, பலனோ உண்டாகிறதில்லை. இதே விதத்திலாகும் இந்திரியம் சரியாக முத்தியிருக்கவேண்டும். இந்திரியத்தை முத்த விடாமல் காமுகர்களாகி நடக்கின்றதினால்தான் அநேக ஜனங்கள் இன்றளவும் உலகத்தில் விசனமடைந்து வருகிறார்கள். ஆகையினால் யாதொருவரும் எவ்விதத்திலும் இந்திரியத்தை இளகவிடாமல் மூப்பச்செய்து தன்னுடைய மனைவியை மாத்திரம் புணர்ந்தால் அதியோக்யனாகியும் ஞானியாகியும், விஸிஷ்டனாகவுமிருக்கின்ற சந்தானம் உண்டாகின்றதாகும். ஆனதினால் யாதொருவரும் எவ்விதத்திலும் இந்திரியத்தை நாசம் செய்யாமல் பத்திரமாகக் காப்பாற்றிக் கொள்ளவேண்டியது. அவ்விதமிருக்கின்றவருக்குத்தான் தீரதையும், கெம்பீரமும், வீரியமும் (சௌரியமும்) சாந்தையும், சஹிக்கக்கூடியதான சஹன சக்தியும் உண்டாகின்றதாகும்.

75. பிரேமக் கலகம். 19—1—'26.

சித்த ஸமாஜக்காரர்களாகி சுவாதந்திரிய ஜீவிதமாக வாழ்ந்து வருகின்ற நம்முடைய ஸமாஜத்தில் மனைவி, மக்கள் என்ற பந்தம் வைத்து ஆசாபாஸக் கலகங்களை உண்டாக்கவோ துவேஷிக்கவோ செய்தால் அவரை அத்தருணத்திலேயே இடம் மாற்றம் செய்ய வேண்டியதாகும்.

76. பர்த்தாவைப் பின்பற்றும் பாரியை. 16—2—'26.

ஒரு பர்த்தாவை ஸமாஜத்திலிருந்து பிரிக்கும்போது அவருடைய பத்தினி அவருடன் கூடப்போவதற்கு இஷ்டப்படுகின்றதானால் அந்த ஸ்திரீயையும் விண்ணப்பம் வாங்கி பிரித்தனுப்பி விடவேண்டியது. மறுபடியும் அந்த பர்த்தா ஸமாஜத்தில் சேர்ந்தாலும் அந்த ஸ்திரீயை ஸமாஜத்தில் சேர்த்துக்கொள்ளக்கூடாது. காரணம் என்னவென்றால் அவள் பர்த்தாவை சிநேகித்தவளாகும். ஸமாஜத்தை சிநேகித்தவளல்ல. ஸமாஜ சிநேகமில்லாதவர்களை ஸமாஜத்தில் வைத்துக்கொள்ளக்கூடாது.

77. பர்த்தாவுடன் பின்துடரா பாரியை. 5—5—'26.

பர்த்தாவை ஸமாஜத்திலிருந்து பிரித்தால் அவருடைய பத்தினிக்கு ஸமாஜத்திலிருந்து போக இஷ்டமில்லாததினால் அவளை எவ்விதத்திலும் வசப்படுத்திக்கொண்டு போகவேணுமென்று அந்த பர்த்தா உத்தேசிக்கும்பொழுது அதற்கு யாதொரு விதத்திலும் இடங்கொடுக்காமலிருப்பதற்காக ஆஸ்ரமக்காரர்கள் முக்கியமாய் சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டியது.

78. ஸ்திரீகளோடுள்ள அனுவசியப் பழக்கங்கள். 8—3—'30.

ஸ்திரீகளோடு விளையாட்டுச் சிரிப்பு முதலான அனுவசியப் பழக்கங்கள் உண்டானால் விகாரமுண்டாக இடமாகியும் அவ்விதம் விகாரமுண்டானால் இந்திரிய ஸ்கலனம் உண்டாகியும், அதன் நிமித்தம் அநேக ரோகங்கள் உண்டாகின்றதாகும். அதுவுமல்லாமல் ஸ்திரீகளோடுள்ள விநோதங்களான பழக்கங்களின் நிமித்தம் உலகத்தில் மகா தபசிகளான ரிஷீஸ்வரர்களுக்கும், மகாதன்மார்

களாகிய ராஜாக்களுக்கும் பலவித ஆபத்துக்களும் நேரிட்டிருக்கின்றது. ஆனதினால் அவ்வித பழக்கங்கள் ஸமாஜத்தில் கூடாது.

79. ஸ்திரீ புருஷர்களின் நடவடிக்கை. 28—9—'25.

ஸ்திரீ புருஷர்கள் எவரிடத்திலேனும் பேசும்போதும், பழகும்போதும், கண்யமில்லாமலும், தைரியத்திலும், நயத்திலும், சந்தோஷத்துடனுமாயிருக்க வேண்டியது. அதல்லாமல் பலவித நாட்டியங்கள் காண்பித்தும், முகத்தினாலும், கண்களினாலும், பலவித காதல் ஒய்யார ரசங்களை, (சிருங்கார ரசங்கள்) உண்டாக்கிப்பேசவோ, பழகவோ கூடாது. அவ்விதம் செய்கின்ற அங்கத்தையும் ஸமாஜத்தில் வைத்துக்கொள்ளக்கூடாது.

80. குற்றத்திற்கு இடங்கொடுத்தல். 23—7—'31.

ஸமாஜக் காரர்கள் எவ்விதத்திலும் குற்றங்கள் செய்யக் கூடாது. குற்றம் நடந்து போனதன்பிறகு ஆலோசனை செய்வதில் பலனில்லை. குற்றம் வருகின்றதற்குள்ள காரணம் ஏதோ அதை ஆலோசித்து அதையாகும் தாம் நிறுத்தல் செய்யவேண்டியது. அதாவது கர்வம் நிமித்தம் அகங்காரம் உண்டாகி குரோதம் முதலான துவேஷங்கள் உண்டாகின்றன. அதனால் சித்த ஸமாஜஸ்தனை யாதொருவர் என்ன சொன்னாலும், என்ன செய்தாலும் அதற்கு யாதொருவித வியாகூலமும், பரிதாபமும் இல்லாமல் அவர் செய்கின்றதையும், சொல்லுகின்றதையும் மதியாமல் அவரோடு சாந்தமாயும், சந்தோஷத்தோடும், ஆதரவோடும், தாழ்மையுடனும் கூடிப்பழக வேண்டியதாகும்.

81. ரகஸ்யக் கடிதமும், பதிலும். 15—12—'25.

அன்னியர்கள் ஸமாஜ அங்கங்களுக்கு ஏதாவது கடிதங்கள் அனுப்பினால் அதை ஆஸ்ரம வாசிகளாகிய எல்லாவரோடும் படித்துக் கேட்கச் செய்தும், அவருக்குக் கொடுக்கின்ற பதிலும் படித்துக் கேட்பிக்கின்றதுமாகும். அவ்விதம் செய்யாமலிருந்தால் அது ஒரு பெரிய குற்றமாகிறது.

82. ஸந்தேகமான ரகஸ்யக் கடிதங்கள். 15—12—'25.

அவ்வித ரகசியக் கடிதங்கள் வருகிறதென்றும், அது ஸமாஜக் காரருக்கு அறியப்படுத்தியதில்லையென்றுமுள்ள சந்தேகங்களுண்டானல் அவ்வாஸ்ரம பிரஸிடெண்ட்டோ, காரியதரிசியோ அக் கடிதத்தை உடைத்து அதிலுள்ள விபரத்தை கிரஹித்து மேல் உத்தியோகஸ்தருக்கு ரிப்போர்ட்டுச் செய்யவேண்டியது.

83. தூஷணையான ரகஸ்யக் கடிதங்கள். 23—12—'25.

அவ்விதமுள்ள கடிதங்கள், ஸமாஜத்திற்கு விரோதமாயும் தோஷமாயும் இருக்கிறதாக தோன்றும்பட்சத்தில் அவ்வங்கத்தை ஸமாஜத்தில் வைத்துக்கொள்ளக்கூடாது.

84. நம்முடைய ஸ்திதி. 22—12—'25.

நம்மை குருவென்றநிலையில் நம்மிடம் யாதொன்றும் சொல்லக்கூடாதென்றும், நம்மை ஓர் உயர்ந்த பதவியிலுள்ளவரென்றோ எண்ணி நம்மோடு யாதொருவரும் பழகக்கூடாது. நம்மோடு சமத்துவமாகியும், சிநேகிதனுகவும், சகோதரனுயும் பழகவேண்டியது. நம்மை யாதொராளுக்கும், எச்சமயத்திலும், நாமிருக்கின்ற எந்தயிடத்திலும் வந்து காணவும், அவருடைய உத்தேசம் ஏதானுலும் அதை நம்மோடு சொல்லவும் செய்யலாம்.

85. ஒளியாமல் பேசவேண்டிய கிரமம். 22—12—'25.

ஸமாஜ அங்கங்கள் யாதொன்றும் உள்ளிலே கருதாமல் அவருடைய இருதயம் திறந்துபேசுகையும், அதற்கு அஸ்திவாரப்படுத்தியிருக்கின்ற தொழிலையும் செய்வதல்லாமல் வாக்கொன்றும், தொழிலொன்றுமாய் யிருக்கக்கூடாது. அப்படி உள் கபடத்தோடுள்ள யாதொரு ஆளையும் ஸமாஜத்தில் வைத்துக்கொள்ளக்கூடாது.

II. ஆகாரச் சட்டங்கள்.

86. தனிமையான ஆகாரம். 21—10—'24.

ஸமாஜத்திலிருந்து ஏதாவதொரு காரணமாக வெளியில் போயிருப்பவரும், வியாதியஸ்தர்களும், குழந்தைகளும் தவிர

பாக்கியுள்ள யாதொரு அங்கமும் ஏதொரு பக்ஷண பதார்த்தத்தை யும் தனித்தனியாக சாப்பிடக்கூடாது.

87. ஸக்தினியும், ஸபீதியும். 12—5—'23.

ஸமாஜத்தில் எல்லா ஆகாரச் சமயங்களிலும் ஸக்தினி, ஸபீதியு மாகத்தானிருக்க வேண்டியது. பக்ஷண பதார்த்தங்கள் யாவையும் ஒன்ருக ஓர் பாத்திரத்திலிட்டு சட்டுவத்தினல் கிளறிக் கலந்து ஓரே பாத்திரத்தில் பரிமாறி எல்லோரும் ஓரே சமயமாயிருந்து கொண்டு உண்ணுவதானது ஸக்தினியும், மேல்பிரகாரமாகவே எல்லா பானங்களையும் ஒன்ருகயிருந்து ஓரே பாத்திரத்தில் பானம் செய்வதுதான் ஸபீதியுமாகின்றது.

88. ஸக்தினியினுடைய நிலைமை. 15—3—'25.

ஸக்தினிக்கு இஷ்டமில்லாதவர்கள் ஸ்வான (நாய்) புத்தியுள்ள வர்களாகும். காரணம், ஆகாரச் சமயங்களில் ஒன்றுக்கொன்று கடித்துக்கொள்கின்றது நாய்க்களாகும். அதனுல் அவ்வித நாயினு டைய செய்கைகளைவிட்டு மனிதத் தன்மையில் நடந்துக்கொள்ள வேண்டியதாகும். மனிதத் தன்மையானது சமரசமாகின்றது அது சமத்வமாகும். இதன்னியில் மனதில் கல்மிஷம் வைத்து ஸக்தினியில் சேர்ந்தால் அது ரோகமாய்த் தீரும்.

89. ஆகாரம் சாப்பிடவேண்டிய முறை. 28—6—'26.

அவரவருடைய கையினுல் அள்ளியுண்ணுவதல்லாமல் எவரும் மற்றவருக்கு உருட்டிக்கொடுக்கக்கூடாது.

90. ஜெப சமயத்திலுள்ள ஆகாரம். 13—4—'31.

ஜெப சமயத்தில் ஸமாஜக்காரருக்கோ அன்னியர்களுக்கோ ஆஸ்ரமத்திலிருந்து யாதொரு ஆகாரமும் கொடுக்கக்கூடாது.

91. ஸமாஜத்தாருடைய ஆகாரச் சமயம். 15—9—'25.

ஆகாரச் சமயத்தில் அன்னியர்கள் ஆஸ்ரமத்திற்கு வந்திருந்தால், அவர்கள் ஆஸ்ரமத்தில் ஆகாரம் சாப்பிடுவது

யிருக்கும்பக்ஷத்தில் அவர்களுக்கு ஆகாரம் கொடுத்து முடிந்த பிறகுதான் ஸமாஜக்காரர்கள் ஆகாரம் உட்கொள்ள வேண்டியது.

92. அன்னியர்களுக்கு ஆகாரம் கொடுத்தல். 15—9—'25.

ஸமாஜத்திற்கு யாரொருவர் பசியோடு வருகின்றுரோ அச்சமயத்தில் அங்கு ஆகாரம் தயாரில் இல்லையானுல் உடனே இருக்கின்றதைக்கொண்டு தயார் செய்து கொடுக்கவேண்டியது.

93. காபி, டீ முதலிய பானங்கள். 23—7—'31.

ஸமாஜத்தில் காப்பி, தேத்தண்ணீர் முதலியவைகள் உபயோகிக்கக்கூடாது. அதற்குப் பதிலாக காலையில் கஞ்சியோ அல்லது அது வேண்டாத அன்னியர்களுக்கு ஜீரகம் கொத்தமல்லி விதை முதலியவைகள் கொதிக்கவைத்த தண்ணீரையோ கொடுக்க வேண்டியதாகும்.

94. கடுகு விபரமும், ஸமாஜக்காரர்களும். 26—3—'29.

ஸமாஜக் காரர்கள் யாவரும் கடுகு உபயோகிக்கக்கூடாது.

95. புளிப்பு சாமான்கள். 21—6—'30.

ஸமாஜக்காரர்கள் மோர், தயிர், எலுமிச்சம்புளி முதலியவைகளல்லாமல் வேரே மரப்புளி முதலானவைகளை உபயோகிக்கக்கூடாது.

96. பிரத்யேக ஆகாரங்கள். 22—4—'29.

காரம், புளி, உப்பு இவைகளை உபயோகிக்க இஷ்டமில்லாதவர்களுக்கு அவர்களுடைய இஷ்டானுசாரம் தனி ஆகாரம் தயார் செய்து கொடுக்கவேண்டியதாகின்றது.

97. சமைக்காத ஆகாரங்கள். 14—5—'27.

ஆஸ்ரமத்திற்கு வருகின்றவர்களில் எவர்களேனும் வேகவைத்த தின்பண்டங்களை உபயோகிக்காதவர்களாயிருந்தால் அவர்களுக்கு அவர்கள் உபயோகிக்கின்றதான காய் கறிகள் முதலிய ஆகாரங்கள் எதுவோ அதை தயார் செய்து கொடுக்கவேண்டியது.

III. சித்த வித்யா சட்டங்கள்.

98. சித்த வித்யையின் விபரம். 4—3—'25.

தன்னிலிருக்கின்றதும், அதோகதியாகி வெளியில் நசித்துப் போய்க்கொண்டிருக்கின்றதுமான ஜீவனை, அப்பிரகாரம் வெளியில் நசிக்கவிடாமல் தன்னுடைய உள்ளிலேயே ஸதா சர்வ சமயத்தி லும், மேலேயும் கீழேயுமாக நடத்தித் தன்னிலிருக்கின்ற பிரம்மரந் திரத்தைத் தட்டித்திறந்து அதில் ஜீவனை அடக்கி இருப்பதற்காக வேண்டி படிக்கிறதாகும் சித்த வித்யை.

99. சித்த வித்யா அப்யாசமும், மகத்வமும். 18—6—'26.

கேரளத்திலுள்ளவர்களும், மற்ற தேசத்து நானாஜாதி ஜனங் களும் ஒன்றுகூடி ஸமாஜமாய்ச் சேர்ந்திருப்பதற்குள்ள காரணம், நம்முடைய முயற்சியோ சாமர்த்தியமோ அல்ல. பின் எதைத் கொண்டுவென்றால், இதற்கெல்லாம் அடிப்படையாகிய சித்த வித்யையைக்கொண்டுதான். அவ்வித்யையானது எப்படிப்பட்டதென் றால் எவராலும் ஜெயிக்க முடியாத ஒரு ஆயுதமாகும். அவ்வித முள்ள மகத்தாயிருக்கின்றதான வித்யையைத்தான் நமக்கும் ஸமா ஜத்திற்கும் மற்றுமுள்ள உலகமுழுவதும் ஜெயிப்பதற்குள்ள ஓர் ஆயுதம். அவ்வாயுதத்தை எச்சமயமும் அவரவர்களுடைய கையிலிருந்து கீழே வைக்காமல் அப்யாசித்துக்கொண்டிருந்தால் யாதொரு விதத்திலும் எவ்வித விரோதிகளும் நம்மைத் தொடுவ தில்லை. ஒருக்கால் அவர்கள் தொட்டுவிட்டால் அவ்விரோதிகளு டைய கண்டம் துண்டாகிப் போகின்றதாகும். அதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. அதன்படி அப்யாசிக்காமலிருந்தால் அதிபயங் கரமான சத்துருக்கள் வந்து பிடித்து இழுத்துக்கட்டி கஷ்ட முண்டாக்கக்கூடும். ஆனதினால் அவரவர்கள் கைவசத்திலுள்ள ஆயுதமாகிய வித்யையைக்கொண்டு ஸதா அப்யாசம் செய்துக் கொண்டிருந்தால் தனக்கு நேராக யாதொரு விதத்திலுமுள்ள விரோதிகள் வருகிறதில்லை.

100. சித்த வித்யை அப்யாசிக்க வேண்டிய சமயங்கள். 16-3-'25

உலகத்திலுள்ள எல்லா அவஸ்தைகளையும் விட்டு ஸமாஜத்தில் சேருகின்றதானது, அவரவருடைய குணத்திற்கும் மேல் கதிக்கு

மாகும். அது சித்த வித்யையில் மாத்திரமே சாத்யப்படுவதாகும். ஆனதினால் ஸமாஜக்காரர்கள் தினந்தோறும் அதிகாலையில் 3 மணி முதல் 5 மணி வரையிலும், மத்தியானம் (பகல்) 12 மணி முதல் 2 மணி வரையிலும், சாயங்காலம் (மாலை) 6 மணி முதல் 7 மணி வரையிலும், இராத்திரி (இரவு) 8 மணி முதல் 10 மணி வரையிலும் சித்த வித்யையை எல்லோரும் ஒன்றாக சேர்ந்திருந்து அப்யசிக்க வேண்டியது. அதற்குத்தான் ஜெபமென்று சொல்வதாகும்.

101. சித்த வித்யா அப்யாச முறை. 16—3—'25.

வித்யையை அப்யாசிக்கும்போது ஸமாஜத்தின் ஜெப ஸ்தலத்தினுடைய கதவுகளையும், ஜன்னல்களையும் அடைத்து ஸமாஜக்காரர்கள் யாவரும் நிமிர்ந்து உட்கார்ந்து, அன்னியரைப் பார்க்காமலும், அன்னியருடைய அப்யாசத்தைக் குறித்து ஆலோசிக்காமலும், சித்த வித்யையை அப்யாசிக்க வேண்டியது.

102. வாயுவை பலாத்கரித்தல். 30—11—'24.

வித்யையை அப்யாசிக்கும்பொழுது எவரும் வாயுவை பலாத்காரத்தினால் பிரமரந்திரத்திற்கு இழுத்துக்கொண்டுபோய் நிறுத்தி ஜீவனைக் கஷ்டப்படுத்தக்கூடாது.

103. சித்த வித்யாவின் அனுபவங்கள். 31—8—'24.

வித்யையை அப்யாசிக்கின்றதிலிருந்து கிடைக்கின்ற ரகசியங்களைப்பற்றிச் சொல்லவோ, கேட்கவோ கூடாது.

104. சித்த வித்யா வாதப் பிரதிவாதம். 30—11—'24.

வித்யையை அப்யாசிப்பது வாதப் பிரதிவாதத்திற்கோ, அபிமானத்திற்கோ அல்ல. அதானது அவரவருடைய ஜீவன் முக்திக்காகும். ஆனதினால் யாதொரு அங்கமும் வித்யையைப் பற்றி வாதப்பிரதிவாதம் செய்யக்கூடாது.

105. அனுபவ சிரத்தை. 15—3—'25.

வித்யையை அப்யாசித்து அனுபவத்தில் வரும்பொழுது, முக்கியமாக கவனிக்கவேண்டியது என்னவென்றால் அனுபவமாகி

வரும்போது புத்திக்கு பலவித மாற்றங்களுமுண்டாகும். அம் மாற்றத்திற்கு தகுந்தாற்போல் ஆடுவதோ, தனக்குத் தோன்றிய பிரகாரம் செய்வதோ, அது ஆபத்திற்கிடமாய்த் தீரும். ஆனதினுல் அனுபவத்திற்கு வரும்பொழுது மௌனமாக எல்லாவற்றி லிருந்தும் விலகி தனித்து இருக்கவேண்டியது. அவ்விதமே தனித்திருக்கச் செய்யவேண்டியதுமாகும்.

106. ஜெபத்திற்கு வராதவர். 29—11—'29.

வித்யயை அப்யாசிக்கும் சமயத்தில் அல்லது சமயங்களில் எவரொருவர் வியாதியென்ருே பலஹீனமென்ருே அல்லது அசௌக்கியமென்ருே சொல்லி ஜெபத்திற்கு வராமல்போய் படுத்திருந்தால் அவரை சக்தினி, ஸபீதி இதுகளில் சேர்க்கக் கூடாது.

107. சித்தாட்டம். 29—11—'28.

வித்யயை அப்யாசிக்கின்ற சமயத்தில் யாதொரு அங்கமும் தன்னுடைய சக்தியை தன்னில் ஒதுக்கி அப்யாசிக்கின்றதல்லாமல் சித்தாட்டம்கொள்வது கூடாது.

108. சித்த வித்யயை அப்யசிக்கச்செய்தல். 24—4—'29.

ஸமாஜ அங்கங்களுடைய ஜப காரியத்தில் ஜெப மினிட்டரல் லாமல் ஜெனரல் உத்தியோகஸ்தர்கள் முதற்கொண்டு யாதொரு உத்தியோகஸ்தரோ, அங்கமோ யாரும் எதையும் செய்விக்க வேண் டியதில்லை. காரணம் உலகத்திலுள்ள எல்லா ஸமாஜ அங்கங் களையும் ஒரே சமயத்தில் ஜெபத்திலிருக்கும்படி செய்து ஜெபிக்கச் செய்யத்தக்க சக்தி ஒருவருக்கும் உண்டென்று நமக்குத்தோன் றப்படாததினுலாகும்.

109. ஜெப சமயத்தில் கூடாதவர். 23—10—'27.

ஜெப சமயத்தில் ஏதாவதொரு அங்கம் தகுந்த காரணமில் லாமல் ஜெபிக்காது, மற்ற வேலை ஏதாவது செய்கின்றதானுல் அவரை அது முதற்கொண்டு அவ்வேலை செய்கின்ற ஒரு தனிச்

ஜாதியாகப் பிரித்து வைத்து நீசவிருத்திக்காரராக வெளியில் தள்ளி வைக்கின்றதாகும்.

110. ஜெபத்தில் அசிரத்தை. 23—3—'29.

ஜெபத்தில் கவனக்குறைவாயிருக்கிறவர்களைக்கண்டு அவர்களை உஷார் படுத்தும்பொழுது அதைப்பற்றி யாதொரு சங்கடமோ, வியாகூலமோ இல்லாமல் சஹித்தும், அது நம்முடைய நன்மைக்காகத் தான் என்றெண்ணி சந்தோஷிப்பதற்கு பிராப்தியுடையவர்களாகும் பொழுது மாத்திரமே ஜபம் நன்றாக வரும்.

111. ஜெப சமயத்தில் தூக்கம். 16—8—'26.

ஜப சமயத்தில் உட்கார்ந்து ஜபிக்காமல் படுத்துத் தூங்குகின்றவர்கள் மகா சண்டாளர்களாகும். காரணம் ஈஸ்வர விசாரம் செய்யவேண்டிய நேரத்தில் அதாவது சமயத்தில் அதற்கு முடியாமல் படுத்துத் தூங்குகின்றவர்கள் ஈஸ்வரப் பிரீதியில்லாதவர்களாகும். அப்பிரகாரம் ஈஸ்வரப் பிரீதியில்லாதவர்கள் ஸமாஜத்தில் தேள்வையில்லை.

112. குறித்த சமயத்தில் ஜெபிக்காதவர். 18—4—'28.

ஆஸ்ரமங்களிலிருந்து ஏதாவதொரு காரியமாக வெளியில் போயிருக்கின்ற அங்கங்களைத் தவிர பாக்கியுள்ள அங்கங்கள் குறிப்பிட்ட சமயம் முதற்கொண்டு முடிவு சமயம் வரையிலும் வித்யயை அப்யாசிக்காமலிருந்தால் அவர்களை நீச்சர்களாக்கி வெளியில் நிறுத்தவேண்டியது.

113. ஜெபிக்காதவருக்குள்ள தண்டனை. 18—4—'28.

ஜெபிக்காமலிருக்கின்ற அங்கங்களோடு மற்றுமுள்ள அங்கங்கள் அவர்களுடைய யாதொரு வேலையில் சேராமலும், அவர்கள் தங்களுடைய சொந்த இஷ்டப்பிரகாரம் ஸமாஜத்திலிருந்து எக்காலத்தில் விட்டுப்போகின்றார்களோ அக்காலம் வரையிலும் அவர்களுடைய எல்லாச் செலவுகளையும் வெளியில் நிறுத்திக்கொடுத்துக்கொள்ளவேண்டியது. அவர்களை தன்னுடைய சொந்த இஷ்டம்

போல் ஏதாவது வேலைகள் செய்கின்றதற்கு விரோதிக்காமலும், வேலை செய்யவேண்டி நிற்பந்திக்கவும் கூடாது.

114. அவரை உதவியவர்க்குள்ள தண்டனை. 18—4—'28.

மேற்சொன்ன பிரகாரம் வித்யயை அப்யாசிக்காமலிருந்தவரை வெளிப்படுத்தாமல் அவருக்கு சகாயம் செய்தால் அவர்கள் குருப்பிரஷ்டர்களாவார்கள்.

115. ஜெபம் முடிந்தவுடன் தூங்குவது. 16—2—'29.

ஜெபம் முடிந்தவுடன் ஒருவரும் தூங்கக்கூடாது. ஆகாரம் முடிந்தபிறகே தூங்கவேண்டியதாகும். காரணம், என்னவென்றால் அதிக அங்கங்களிருப்பதினாலும், அவர்கள் ஓரோரிடத்தில் படுத்துத் தூங்கினால் அவர்களைக் கண்டுபிடித்து ஆகாரம் கொடுக்க கஷ்டம் நேரிடுமென்பதினாலுமாகும்.

116. மரணம். (மரித்தல்) 31—8—'24.

வித்யயை அப்யாசிக்கின்றவர்கள் சரியாகப் புருவமத்ய தியானத்தோடு ஊர்த்துவ கதியை அடைந்து, சத்துப்போகாமல் ஜீவன் தன்னுள்ளில் அடங்கி மரணம் ஏற்பட்டிருந்தால் அவர்களை சரியாக ஸமாதி கட்டி அதில் அடக்கம் செய்ய வேண்டியது.

IV. ஆஸ்ரம ஸ்தாபன சட்டங்கள்.

117. ஆஸ்ரம வாசம். 20—12—'21.

புதிதாக ஆஸ்ரமங்கள் ஏற்படுத்தி எங்கெந்த ஸ்தலங்களில் சேர்ந்திருப்பதற்கு உத்தரவு ஏற்படுகின்றதோ அந்தந்த ஸ்தலங்களுக்குப்போய் இருப்பதற்கு அங்கங்கள் எப்பொழுதும் தயாராய் இருக்கவேண்டும்.

118. ஆஸ்ரமத்திற்கு கொடுத்த சொத்தினுடைய விபரம். 14-12-'24.

ஸமாஜத்தில் சேருகின்ற அங்கங்கள் எல்லாப் பந்தங்களையும், அன்யோன்யம் பகைகளையும் விட்டு அவர்களுடைய பெயரிலுள்ள சொத்துக்களை ஸமாஜத்தில் சேர்க்கத்தகுந்ததாயிருப்பதை

சேர்த்தும், மீதியுள்ளதை எவர்களுக்குப் பாத்தியதையுண்டோ அவர்களுக்குக்கொடுத்தும், தன்னுடைய சொந்தப் பெயரில் யாதொரு பிரகாரத்திலுமுள்ள எவ்வித சொத்துக்களும் வைத்துக் கொள்ளக்கூடாது. ஸமாஜத்திலுள்ள சொத்துக்களானது கூட்டுச் சொத்துக்களாகும். அவைகள் தனித்தனி ஒருவருக்கும் பாத்தியதையில்லை. ஸமாஜத்திலிருக்கின்ற காலம் வரையிலும் எல்லாவர்க்கும் சம உரிமையாகும். ஸமாஜத்திலிருந்து விட்டுப்போனால் அந்த அங்கத்திற்கும் சொத்திற்கும் யாதொரு பாத்தியதையுமில்லை.

119. ஆஸ்ரமக்குடும்பம். 13—3—'25.

ஸமாஜம் தலைமுறையாகவும், அங்கங்கள் குடும்பங்களாகவும் கருதுவதல்லாது, வேறே பந்தத்தோடுங் கூடி யாராவதுண்டாயிருந்தால், அவரை ஸமாஜத்தில் வைத்துக்கொள்ளக்கூடாது. ஸமாஜமானது ஐக்கிய ஜீவிதமென்ற சுவாதந்திரிய ஜீவிதமாகும்.

120. ஆஸ்ரம ஸ்தலங்கள். 24—10—'24.

ஆஸ்ரம ஸ்தலங்கள், சுவாதந்திரியமாக கைத்தொழில் நடத்தி உபஜீவனம் செய்யத் தகுந்தவிதமாயிருக்க வேண்டும். அவ்விதமல்லாமல் ஸமாஜக்காரர்கள் மற்றொருவருடைய தோப்பிலிருக்கின்ற தேங்காய் முதலிய பொருள்களை எவரும் திருடிப்போகாமல் காவல் காத்துக்கொண்டிருப்பது போல் இருப்பதற்கல்ல.

121. அன்னியருடைய பிரவேசம். 24—10—'24.

ஆஸ்ரமத்தில் அன்னியர்கள் வந்தால், அவர்கள் தங்குவதற்குத்தனியாக அமைத்துள்ள இடம் தவிர, மற்ற எந்த இடங்களிலும் அவர்கள் பிரவேசிக்கக்கூடாது. பிரவேசப்படுத்தவும் கூடாது. இந்த விபரத்திற்கு ஒரு நோட்டீஸ் எழுதிப்போட வேண்டியதுமாகும்.

122. அக்கிரமப் பிரவேசம். 24—10—'24.

மேலே கண்டபடி எழுதிப்போட்டிருக்கின்ற நோட்டீசை மதிக்காமல் அக்கிரமமாகப் பிரவேசிக்கின்றவரை தேகோபத்ரவஞ்

செய்யாமல் பந்தோபஸ்துடன் அருகிலுள்ள போலீஸ் ஸ்டேஷனில் தெரியப்படுத்தி ஒப்பிவிக்க வேண்டியதும், நடந்த விபரத்தைப் பற்றி அந்த எல்கைக்கு அதிகாரப்பட்ட மாஜிஸ்த்ரேட் அவர்களுக்கு ஓர் விண்ணப்பம் கொடுக்கவேண்டியதுமாகும்.

123. தானச் சோத்தினுடைய அதிகாரம். 13—4—'25.

ஸமாஜ அங்கங்கள், ஸமாஜத்திற்குத் தானமாகக் கொடுத்ததாகிய எல்லா ஸ்தாவர ஜங்கம சொத்துக்களும், அந்தந்தக்காலங்களில் ஸமாஜத்திலிருக்கின்றவர்களுக்கல்லாமல் தானம் செய்து கொடுத்தவர்க்குத் தனியாக யாதொரு அதிகாரமும் பாத்தியதையுமில்லை.

124. ஸமாஜ சோத்தினுடைய விற்கிரைய சுவாதந்திரியம். 29-7-'28.

ஸமாஜத்தின் யாதொரு ஸ்தாவர ஜங்கம சொத்தினைப் பொருத்து அதிகாரிகளுக்கோ, அங்கங்களுக்கோ, யாதொரு விற்கிரைய-சுவாதந்திரிய (அதிகாரம்)முமில்லை.

125. புதிய ஸ்தலங்கள். 15—3—'25.

ஸமாஜக்காரர்கள் ஆஸ்ரமம் ஸ்தாபிப்பதற்காகவோ அல்லது கிருஷி (விவசாயம்) செய்வதற்கு வேண்டியோ ஏதாவது சொத்துக்கள் வாங்குவதற்கு உத்தேசமுண்டானல் ஜெனரல் பிரசிடெண்டிற்கு தெரியப்படுத்தியும், ஷை சொத்துக்களை ஜெனரல் பிரசிடெண்ட்டு, ஜெனரல் பிரதிநிதி, இவர்களைக்கொண்டு பரிசோதனை செய்து ஜெனரல் பொக்கிஷதாரிடம் பணம் வாங்கி சொத்துக்கள் வாங்கவேண்டியதுமாகிறது.

126. கொடுக்கல் வாங்கலும், தஸ்தாவேசுகளும். 2—8—'26.

ஸமாஜ வகை சொத்துக்களும், கொடுக்கல் வாங்கல் மற்ற தஸ்தாவேசுகளும், ஜெனரல் பிரதிநிதியுடையபேரில் இருக்க வேண்டியது.

127. சாசன சொத்தினுடைய வாசகம். 23—7—'31.

ஸமாஜத்திற்காக எடுக்கின்ற சகலவித சொத்துக்களுக்கும், தானம் தருகின்றதற்கும், வேரே எவ்விதத்திலும் ஸமாஜத்திற்கு

கிடைக்கின்றதற்கும், மற்றுமுள்ளவைகளுக்கெல்லாம் எழுத வேண்டிய ஆதார வாசகத்தில் சேர்க்கவேண்டியது யாதெனில்:— சுவாமி ஸ்ரீ சிவானந்த பரமஹம்ஸரால் ஸ்தாபிக்கப்பட்ட சித்த ஸமாஜத்திற்காக ஷெ ஸமாஜ ஜெனரல் பிரதிநிதியாகிய இன்னவருடைய பேரில், இப்பொழுது சித்த ஸமாஜத்திலுள்ளவர்களும், அந்தந்தக்காலங்களில் ஷெ ஸமாஜத்தில் சேருகின்றவர்களுமான அங்கங்கள்; ஜாதிமத வித்யாசமில்லாமல் ஏகோதர சகோதரத்துவத்தில் நடந்துகொள்ளுகிற யாபேர்களும் ஒன்றுய்ச் சேர்ந்திருந்து வேலை செய்து உபஜீவனம் செய்வதற்காக வேண்டியுள்ளதான சொத்து. x x x x x

128. சொத்துக்களினுடைய பாத்தியதை. 15—5—'28.

அவ்விதமுள்ள சொத்துக்கள் ஸமாஜத்திற்கு மூலதனமாக ஸ்தாபிப்பதால் ஷெ சொத்துக்களானது ஸமாஜத்தில் அந்தந்தக் காலங்களில் உள்ள எல்லா அங்கங்களுக்கும், ஸமாஜ சந்ததிகளுக்கும் பரம்பரையாய் அனுபவிக்க வேண்டியதாகின்றது. ஆனதினுல் ஷெ ஸமாஜ ஜெனரல் பிரதிநிதிக்கு மேல்கண்ட சொத்துக்களுக்கோ, அதனுடைய அனுபோகங்களுக்கோ, சம்மந்தப்பட்டு யாதொரு விற்கிரைய சுவாதந்திரியத்திற்கும் அதிகாரமில்லை. அதாவது சித்த ஸமாஜ சட்டத்திற்கனுசரித்து இருக்கின்றதாகும்.

129. சொத்துக்களின் பேரில் கடன்கள். 23—7—'31.

சித்த ஸமாஜ அங்கங்களுக்கோ, உத்தியோகஸ்தர்களுக்கோ யாதொரு விதத்திலுமுள்ள கடன்களை வாங்கக்கூடாததும் அவ்விதம் ஏதாவது கடன்கள் வாங்கப்பட்டால் அக்கடன்களுக்கும், ஸமாஜத்திலுள்ள யாதொரு ஸ்தாவரஜங்கம சொத்துக்களுக்கும் எவ்வித பாத்தியதையுமில்லாமலிருக்கிறது.

130. கிஸ்திப் பகுதிகள். 23—7—'31.

ஆஸ்ரம ஸ்தலத்தை சம்மந்தப்பட்ட நிலவரித் தீர்வைகளும், மற்றும் வாங்குவதற்கும் கொடுப்பதற்குமுள்ள கடமை அந்தந்த

ஆஸ்ரமக்காரர்களுக்கு இருக்கின்றதும், அவைகளை சம்மந்தப் பட்டுள்ள பத்திரங்கள் ஆஸ்ரம கிருஷி (விவசாயம்) மானேஜர் ஜெனரல் பிரதிநிதியினுடைய பேரில் வாங்கி அதை பதிவுசெய்து அவருக்கு (பிரதிநிதி) அனுப்பிக்கொடுக்க வேண்டியதுமாகின்றது.

131. ஆஸ்ரம ஸ்தலத்திலுள்ள உற்பத்திகள். 23—7—'31.

ஆஸ்ரமத்திலுள்ள கிருஷி தானியங்கள், கிருஷி மானேஜருடைய உத்திரவன்னியில் எடுக்கக்கூடாது.

132. ஏற்பாடுகளின் விபரங்கள். 15—9—'25.

ஸமாஜத்தில் ஏதாவதொரு காரியம் நடப்பில் கொண்டுவர வேண்டுமென்று உத்தேசிக்கின்றதானல், அக்காரியம் நிவர்த்தியடைவதற்காகவேண்டிய எல்லா வேலைகளும் செய்து நிவர்த்தியாக்கவேண்டியதல்லாமல், அதைப்பற்றி பரவச்செய்வதினுலோ, வெளியில் சொல்லி நடக்கின்றதினுலோ யாதொரு பலனுமில்லை. நமக்கு வேண்டியது தொழிலாகும்; ஆரவாரமும், பிரசங்கமும் தேள்வையில்லை.

V. வர்த்தகமும், கைத்தொழில்களும்.

133. வியாபாரமும், கைத்தொழிலும். 5—1—'25.

வியாபாரங்களும், கைத்தொழில்களும் சேர்ந்துள்ள எல்லா வரவு சிலவு கணக்குகளையும் வாரந்தோறும் ஜெனரல் பிரதிநிதிக்கும், மாதாந்திரத்தில் சரியான எல்லா விபரங்களுமடங்கிய ஒரு பட்டிகை ஜெனரல் பொக்கிஷதாருக்கும், அந்தந்த ஆஸ்ரம பிரஸிடெண்டுகள் அனுப்பிவைக்க வேண்டியதும், அவ்வகைகளில் கிடைக்கின்ற லாபங்களை அந்தந்த ஆஸ்ரமத்திலுள்ள சிலவுகள் போக மீதியை அவ்வியாபாரங்களிலோ, கைத்தொழில்களிலோ சேர்த்து அதை விருத்தியாக்கவேண்டியதுமாகிறது.

VI. ஆஸ்ரம சிலவுகள்.

134. ஆஸ்ரமத்தின் சிலவுகள். 15—12—'24.

ஆஸ்ரமங்களிலுள்ள சிலவுகளுக்கு அந்தந்த இடங்களிலேயே வேலைகள் செய்து நடத்தவேண்டியது.

135. அன்னிய ரக்ஷாஸ்ரயம். 23—7—'31.

ஆஸ்ரமக்காரர்கள் அவரவர்களிருக்கிற இடங்களில் நியாயமாக வேலைகள் செய்து உபஜீவனம் நடத்தவேண்டியதல்லாமல், மற்றொருவர் ரக்ஷிப்பதற்கு இருப்பதாகக் கருதி சோம்பேறிகளாக இருக்கக்கூடாது. அவ்விதமிருந்தால் கஷ்டம் வருகின்றதாகும்.

136. சிலவினுடைய உத்தரவாதமும், மேற்பார்வையும். 23-7-'31.

ஆஸ்ரமச் சிலவுகளில் யாதொரு, ஜெனரல் உத்தியோகஸ்தர்களும் பிரவேசிக்கக்கூடாது. அவர்களுடைய கவனமானது மேற்பார்வை மாத்திரமேயாகும். ஆஸ்ரமச் சிலவுகளினுடைய உத்திரவாதங்கள் அந்தந்த ஆஸ்ரமப் பிரஸிடெண்ட்டுகளுக்கு இருக்கின்றதாகும்.

VII. ஆஸ்ரம வேலைகள்.

137. வேலைகளின் உத்தரவாதம். 26—3—'25.

அன்னியரை அடிபணியாமல், அவரவருடைய தொழிலினால் அவரவர் உபஜீவனம் செய்வதற்காகும் ஸமாஜம். அது இன்ன வேலை என்றில்லை. எத்தொழிலும் செய்யலாம். எத்தொழில் செய்தாலும் ஸமாஜக்காரர்கள் ஒற்றுமையாகச் செய்யவேண்டியதாகும். எந்தத் தொழிலுக்கும் அன்னியரிடம் அடிமைப் படக்கூடாது. எல்லாத் தொழில்களும் அவரவர்களே நடத்தவேண்டும்.

138. அன்னியருடைய சகாயம். 4—3—'25.

அந்தந்த இடத்திலுள்ள வேலைகளுக்குத் தகுந்தாற்போல் அங்கங்களில்லையானால் இவ்வளவு ஸமாஜ அங்கங்களை இன்ன சகாயத்திற்காக எங்களுக்கு அனுப்பிக் கொடுக்கவோ, அல்லாவிடில்

அன்னியர்களைக்கொண்டு வேலை செய்ய அனுமதி கொடுக்கவோ வேண்டுமென்று அடுத்த மேலதிகாரியோடு கேட்டுக்கொள்ள வேண்டியதுமாகும். அவசியமான காரியங்கள் ஏதாவதிருந்தால் அதை அன்னியர்களைக்கொண்டு வேலை செய்வித்து மேலதிகாரிகளுக்கு அறியப்படுத்தவும் வேண்டியது.

139. காலானுசரணை வேலைகள். 15—3—'25.

அந்தந்தக் காலங்களில் செய்யவேண்டிய வேலைகளை அந்தந்தக் காலங்களிலேயே செய்து முடிக்கவேண்டியது.

140. வேலையிலுள்ள நிபந்தனை. 2—10—'29.

யாதொரு அங்கங்கத்தையும் தனக்கு அனுபவமில்லாத வேலைகளை செய்யும்படி கட்டாயப்படுத்தக் கூடாது. அவரவர்களுக்குக் கூடுமானதும், தெரிகின்றதுமான வேலைகள் மாத்திரமே செய்ய வேண்டியது. ஆனால் அவர்கள் வேலை செய்தால் தான் ஆஸ்ரமத்திலிருப்பவர்களுக்கு ஆகாரம் செய்வதற்கு முடியும். ஸமாஜத்தில் மூலதனம் தனியாக இல்லாததாகும். அதினால் எல்லா வேலைகளும் எல்லோரும் அறிந்திருக்க வேண்டியதாகிறது. ஆனதினால் எல்லா வேலைகளும் கொஞ்சம் கொஞ்சமாகிலும் செய்யப் பழகவேண்டியது. அவ்விதம் எல்லாத் தொழில்களும் ஒருவர் தெரிந்துக்கொண்டால் மற்றொருவருக்கு அடிமைப்பட வேண்டியதில்லை. இதை எல்லோரும் முக்கியமாய் கவனிக்க வேண்டியதாகும்.

141. வேலையில் விடுபட்டவர்கள். 15—3—'25.

விருத்தாப்பியர்களுக்கும், வியாதியுள்ளவர்களுக்கும், தொழில் சம்மந்தமான காரியங்கள் பாத்தியப்படுகின்றதில்லை.

142. வேலையில் சோம்பல். 15—3—'25.

ஸமாஜ சம்மந்தமான வேலைகளெல்லாம் யாதொரு அஜாக்ரதையில்லாமலும் நடத்தவேண்டியது.

143. ஆஸ்ரம வேலையில் சோம்பலைப்பற்றியுள்ள விபரம். 15-3-'25.

அங்கங்கள் அந்தந்தக் காலங்களிலுள்ள வேலைகளுக்கும், மற்றுமுள்ளவைகளுக்கும் சோம்பேறித்தனமாகவோ, மேல் கீழ்

இல்லாமலோ வேலை செய்தால் அந்தந்த ஆஸ்ரம பிரஸிடெண்டுகள் அடுத்துள்ள மேலதிகாரிக்கு ரிப்போர்ட்டு செய்யவேண்டியதாகும்.

144. அதற்குள்ள தண்டனை. 15—3—'25.

அதன்படி அந்த ரிப்போர்ட்டையனுசரித்து குற்றமுண்டென்று தெரிந்தால், அந்த அங்கத்தை இரண்டாவது ஒரு உத்தரவு கிடைக்கும் வரையில் சேர்க்காமல் நிறுத்தவேண்டியது.

VIII. மினிட் சட்டங்கள்.

145. மினிட் எழுதவேண்டிய முறை. 6—7—'25.

ஆஸ்ரமங்களில் விஸ்வாசமுடைய ஒரு அங்கத்தை நித்ய மினிட்டராக நிச்சயிக்கவேண்டியதும், அவ்விதமுள்ள மினிட்டர் மௌனமாயிருந்து ஒருவரோடும் யாதொன்றும் பேசாமலும், யார் யார் என்னென்ன செய்கின்றார்களோ, பேசுகின்றார்களோ, அவை முழுதும் கொஞ்சம்கூட ஒரு உச்சரிப்பாகிலும் தப்பிதமில்லாமலும் ஆஸ்ரமங்களில் நடக்கும் எல்லா சம்பவங்களையும் அவ்வப்போது எழுதுகின்ற மினிட்டில் எழுதவேண்டியதுமாகும்.

146. மினிட்டரைப்பற்றியுள்ள பேச்சுகள். 13—4—'31.

மினிட்டர் எழுதுகின்ற சம்பவத்தைப்பற்றி ஜெனரல் பிரசிடெண்ட்டு முதலான அங்கங்களில் ஏதாவதொரு அங்கம் ஆஸ்ரமத்திலிருந்து மினிட்டர் கேட்கத்தகுந்த நிலைமையில் எவ்விடங்களிலிருந்து பேசினாலும், அதாவது மினிட்டரை தோஷப்படுத்தியோ, குணப்படுத்தியோ எவ்விதத்தில் பேசினாலும் அதற்குப் பதில் பேசாமல் மௌனமாக இருந்துக்கொண்டு பேசுகின்ற வார்த்தைகளை எல்லாம் மினிட்டில் எழுதிக்கொள்ள வேண்டியதாகும்.

147. மினிட் எழுதுவதிலுள்ள தவறுகள். 13—4—'31.

மினிட்டரை ஏற்படுத்துவதற்குக்காரணம், ஸமாஜம் மேல்கதியாக வந்து எல்லா அங்கங்களும் நன்றாவதற்கு வேண்டியாகும். அவைகளை மறைத்துவைக்க வேண்டுமென்றுள்ள விசாரமுள்ளவரும், ஆஸ்ரமத்தில் நடக்கின்ற சம்பவங்களை எழுதாமலிருப்பது

பதற்கு முயற்சிக்கின்றதானதும்; நம்முடைய சட்டத்திற்கு விபரீதமாகச் செய்கின்றதினாலும், அவர்கள் ஸமாஜ விரோதியும், குருப்பிரஷ்டர்களும், குரு பக்தி இல்லாதவர்களுமாகிறது. அவ்விதமுள்ளவரை ஸமாஜத்தில் வைத்துக்கொள்ளக்கூடாது.

148. அதற்குள்ள தண்டனை. 6—7—'25.

மேலே சொல்லப்பட்ட சங்கதிகளுக்கு அவமதிப்பாகவோ, கிருத்ய (குறித்த) சமயத்து மினிட்டு எழுதாமலிருக்கவோ, செய்தால்; ஜெபத்திற்கு தடஸ்தம் செய்கிறதானால் அதற்குள்ள தண்டனை ஏதோ அது பிரகாரம் அவரை குருப்பிரஷ்டராக்கி வெளியில் தள்ளிவைக்க வேண்டியது.

149. மினிட்டரும், மினிட்டும். 14—4—'25.

மினிட்டர், தான் எழுதிய மினிட்டை வாசித்துப் பார்க்கவோ, அதைத் திருத்தி எழுதவோ கூடாது.

150. மினிட்டில் எழுதக்கூடாதவை. 30—3—'29.

மினிட்டர், ஆஸ்ரமத்தில் ஏற்படுகின்ற வரவு சிலவுகளைபற்றி எழுத வேண்டியதில்லை. தான் காண்பதை மாத்திரம் எழுதலாம். அதாவது இன்னது கொடுக்கின்றது பார்த்தேன், இன்னது கொண்டு போகின்றதைப் பார்த்தேன். அந்தச் சமயங்களில் வெளியிலுள்ள இவ்வளவு பேர்களுக்கு ஆகாரம் கொடுக்கப்பட்டது என்பவைகள் எழுதுகிறதல்லாமல் அதனுடைய எண்ணிக்கையை எழுதக்கூடாது.

151. கள்ள மினிட் எழுதுவதிற்குள்ள தண்டனை. 6—7—'25.

மினிட்டர் எழுதுகின்ற மினிட்டில், சிறிதேனும் கபடம் உண்டென்று தெரிந்தால், அவரை யாதொரு சமாதானமும் வாங்காமல் ஸமாஜத்திலிருந்து பிரிக்கவேண்டியதாகும்.

152. தொழில் இடத்திலுள்ள மினிட்டு. 21—4—'29.

ஸமாஜ ஸ்தலங்களுடைய விவசாய இடங்களில் அதிகமான அங்கங்கள் வேலைக்குப் போகும்பொழுது, அந்தத் தொழிலிடத்திற்கு ஒரு மினிட்டரை நியமித்து அனுப்பவேண்டியதாகும்.

153. மினிட் எழுத முறையில்லாதவர். 6—9—'25.

ஜெனரல் உத்தியோகஸ்தர்கள் முதற்கொண்டு யாதொரு உத்தியோகஸ்தரும் மினிட்டு எழுதக்கூடாது.

154. மினிட்டரை நியமித்தல். 13—4—'31.

ஆஸ்ரமத்திற்கு நித்திய மினிட்டரை நியமிப்பதற்குள்ள அதிகாரம், நமக்கும், ஜெனரல் பிரஸிடெண்டிற்கும் உரியதாகும்.

155. மினிட்டருடைய மேல் உத்தியோகஸ்தர். 13—4—'31.

ஆஸ்ரம மினிட்டர், ஆஸ்ரம பிரஸிடெண்டிற்குக் கீழல்ல. அவர் மினிட்டெடிட்டருடைய கீழ் உத்தியோகஸ்தராகும். அதனால் மினிட்டரை, தண்டிப்பதற்குள்ள அதிகாரம் மினிட்டெடிட்டருக்கும், ஜெனரல் பிரஸிடெண்டிற்கும் உள்ளதாகும்.

156. மினிட் காண்பித்துக் கொடுத்தல். 13—4—'31.

மினிட்டை காண்பித்துக் கொடுக்கின்றது மிகவும் தப்பிதமாகும். ஆனால் ஜெனரல் பிரஸிடெண்ட்டோ, ஜெனரல் காரியதரிசியோ, அவசியப்பட்டால் காண்பித்துக்கொடுக்கலாம். மற்றெவர்க்கும் காண்பித்துக்கொடுக்கக் கூடாது.

157. மினிட்டு பரிசோதனை 13—4—'31.

மினிட்டர் எழுதி முடிந்த மினிட்டுகளை, மினிட்டு பரிசோதகர், மினிட் டெடிட்டர் என்ற இவர்களுக்கல்லாமல் வேறொருவருக்கும் பார்ப்பதற்கு உரிமையில்லை.

158. ஹெட்டாபீஸ் மினிட்டு. 15–3–'25.

தலைமையாபீஸில் ஒரு மினிட்டரை நியமித்திருந்து, அவர் எழுதிய மினிட்டை மினிட்டெடிட்டருக்கு அனுப்பிக்கிடைப்பதில், ஏதாவது குற்றங்களுண்டாயிருந்தால் அதைப்பற்றி ஜெனரல் பிரஸிடெண்டிற்கு ரிப்போர்ட்டு கொடுத்து, அவசியம்போல் தேள்ளைவயானது செய்விக்கவேண்டியதாகும். அம்மாதிரி செய்ய வேண்டியதானது, ஜெனரல் உத்தியோகஸ்தர்களுக்குள்ள குற்றங்

குறைவுகளுக்கு மாத்திரமேயாகும். பாக்கியுள்ள அங்கங்களின் குற்றங்களைப்பற்றி தண்டிக்க மினிட் எடிட்டருக்கே அதிகார முள்ளதாகும்.

159. ஜெப மினிட்டர். 6—7—'25.

ஜெப சமயத்தில் அந்தந்த ஆஸ்ரமப் பிரஸிடெண்டுகள் ஜெப சமயங்களில் ஒவ்வொரு ஜெப மினிட்டரை நியமிக்கவேண்டியதும், நித்திய மினிட்டர் ஜெபிப்பதற்கு இருந்துகொள்ள வேண்டியதும், ஜெபமினிட்டர் அங்கங்களை ஜெபிக்கச்செய்து ஜெப சமயத்தில் உண்டாகின்ற எல்லா சம்பவங்களைக் குறித்து எழுதவேண்டியது மாகும். ஜெபம் முடிந்தவுடனே அம்மினிட்டர் ஜெபமினிட்டை நித்திய மினிட்டரிடம் கொடுக்கவேண்டியதும், அவர் அதை நித்திய மினிட்டுடன் சேர்த்து நூலினல் கோர்த்து ஒன்றுக்கி முடித்துக் கிடைத்த சமயத்தையும் எழுதி கையொப்பமிட்டு மினிட்டு பரிசோதகருக்கு அனுப்பவேண்டியதுமாகிறது

160. ஜெப மினிட்டருடைய தவறுகள். 29—11—'29.

ஜெப மினிட்டர், ஜெப மினிட்டெழுதும்பொழுது அதை எழுதாமல் தூங்கினலோ, வேறு விதமாகவோ யிருந்தால் அதை ஜெபிக்கின்ற சமயத்தில் பார்க்கின்றவர் உடனே அச்சம்பவத்தை ஆஸ்ரம பிரஸிடெண்டிற்குக் காண்பித்துக் கொடுக்கவேண்டியதும், பிரஸிடெண்ட்டு நேரிட்டு கண்டாலும், அந்த நிமிஷத்திலேயே வேறொரு அங்கத்தை ஜெப மினிட்டராக நியமனம் செய்தும், ஜெபம் முடிந்தபின், தூங்கின ஜெபமினிட்டருடன் சமாதானம் வாங்கி ஜெனரல் பிரஸிடெண்டிற்கனுப்பியும், அவ்விபரத்தை மினிட்டெடிட்டருக்கும் ரிப்போர்ட்டுச் செய்யவேண்டியதுமாகும். ஜெனரல் பிரஸிடெண்டு, ஷை மினிட்டருக்கு தண்டிக்கவேண்டிய ரிப்போர்ட்டு எழுதி மினிட்டெடிட்டருக்கு அனுப்பவும் வேண்டியது.

161. ஜெபமினிட்டரை நியமித்தல். 21—4—'29.

நித்ய மினிட்டருக்கு, ஜெப மினிட்டரை நியமிக்கவோ, ஜெப மினிட் எழுதவோ, அதிகாரமில்லை. ஜெபமினிட்டரை நியமிக்க ஆஸ்ரம பிரஸிடெண்ட்டுக்குத்தான் அதிகாரமுள்ளது.

162. மினிட் அனுப்பவேண்டிய முறை. 7—6—'25.

நித்ய மினிட்டும், ஜெப மினிட்டும், மினிட்டு எழுதிய மறு நாளே மினிட்டு பரிசோதகருக்கு அனுப்பிக் கொடுக்க வேண்டியது.

IX. ஸமாஜ பரிபாலனம்.

163. பரண கர்த்தாக்கள். 2—6—'25.

ஸமாஜத்தை பரிபாலிக்கக்கூடியவர்கள் யாவரும், எல்லோருக்கும் தாஸராகி, நாய்க்கு சமமாகி, ராகத்துவேஷமில்லாதவர்களாகி, நான், நீ, என்னுடையது, உன்னுடையது என்றதான அபிமானம் விட்டு, கபடமில்லாதவர்களாகி, கல்மிஷமில்லாதவர்களாகி, விநோதங்களினாலும், சாந்த தயையினாலும் அங்கங்களை ஒற்றுமையாக்கி அவர்கள் செய்கின்ற குற்றங்களுக்கு யாதொரு கோபமுமில்லாமல் சஹித்தும், பொறுத்தும் அவர்களோடு எல்லா சமயங்களிலும் சந்தோஷத்துடன் கூடிப்பழகி, அவர்களுடன் பேசி விளையாடி தன்னோடு ஐக்கியப்படுத்தி ஆளுவதற்குச் சாமர்த்தியமுள்ளவராயிருக்க வேண்டியதாகும். அவர்கள் தான் உத்தியோகஸ்தர்களும், யோக்கியர்களும், நிபுணர்களுமாகிறார்கள். அவ்விதம் நடந்தால் மாத்திரமே உலக சாந்தியும் ஏற்படுவதாகும். அப்பொழுதுதான் தத்துவத்தை உணர்ந்தவர்களாவார்கள். அவ்விதமல்லாமல் ஸமாஜத்தில் வெறும் காகிதபரணம் மாத்திரம் செய்து, ஒருவரோடொருவர் சண்டையிட்டுக்கொள்ளலாகாது.

164. அங்கங்களைப்பற்றியுள்ள பொறுப்புகள். 23—5—'25.

ஸமாஜத்திலுள்ள அங்கங்களினுடைய யாவற்று காரியங்களிலும், மேல் உத்தியோகஸ்தர்கள் பின்பற்றிச் செய்யக்கூடியதும், அதை அங்கங்கள் மறியல் செய்யக்கூடாததுமாகிறது.

165. நியாயமற்ற செய்கைகள். 23—5—'25.

ஸமாஜ உத்தியோகஸ்தர்கள், அவரவர்களுடைய பரணத்தின் கீழ் இருக்கின்ற ஸமாஜ அங்கங்களை மேல் உத்தியோகஸ்தர்கள் வந்து நியாயமில்லாத வேலைகளைச் செய்வித்தால் அதை

மறியல் செய்து ஜெனரல் பிரசிடெண்ட்டுக்கு ரிப்போர்ட்டு கொடுக்கவேண்டியதாகின்றது.

166. உத்தியோகஸ்தர்களுடைய தவறுகள். 23—7—'31.

ஒரு ஸமாஜ உத்தியோகஸ்தர் தவறுதல் செய்தால் அதைப் பற்றி எந்த அங்கமும் ஜெனரல் பிரசிடெண்ட்டினிடம் ரிப்போர்ட்டுச் செய்துக்கொள்ளலாம். பரிபாலன சீலர்கள் எவ்விதத்திலும் அங்கங்களை அடிமைப்படுத்தக்கூடாது.

167. அதற்குள்ள தண்டனை. 23—7—'31.

மேற்சொன்னபடி கிடைக்கின்ற ரிப்போர்ட்டுக்கனுசரித்து அவ்விடத்தில் போய் விசாரணை செய்து குற்றமுண்டென்று தோன்றியதானல் ஜெனரல் பிரசிடெண்ட்டு அவருக்கு தகுந்த தண்டனையை விதிக்கவேண்டியதாகும்.

168. பரிபாலனம். 6—7—'25.

அங்கங்கள் தவறுதல்கள் செய்யப்பட்டால் அதை நயத்தோடு பொறுத்துக்கொண்டு, அத்தவறுகளை அவர்களே உணர்ந்து கொள்ளும்படிசெய்து, அந்தத் தவறுகளுக்கேற்பட்ட தண்டனையை அவர்கள் சந்தோஷத்துடன் அனுபவிக்கத் தகுந்ததாயிருக்க வேண்டும் பரணம்.

169. ஸமாஜ அங்கங்களை நீக்குதல். 5—2—'27.

ஸமாஜத்திலிருந்து யாதொரு அங்கத்தையும் கூடுமான வரையில் பிரிக்கக்கூடாது.

170. அங்கங்களுடைய ஆக்ஷேபணைகள். 28—9—'25.

ஏதாவது காரியங்களில் அங்கங்களுக்கு ஆக்ஷேபணை தோன்றுகின்றதானல் அவைகளை மேலதிகாரிகளுக்கு மனுக்கொடுக்க வேண்டியதும், அவ்விதம் கொடுத்த மனுவுக்கு பதில் கிடைக்காமலிருந்தால், அதைப்பற்றி ஜெனரல் பிரஸிடெண்டினிடம் நேரில் மனுக்கொடுக்க வேண்டியதுமாகிறது.

171. சீரில்லாபரணம். 23—5—'25.

ஸமாஜத்திலிருந்து ஓர் அங்கம் ஒரு ஸமாஜ உத்தியோகஸ்தருடைய பரண நயக்குறைவினால் ஸமாஜம்விட்டுப் போகிறதானால் அந்த உத்தியோகஸ்தரை தண்டிக்கவேண்டியதாகிறது.

172. ஸமாஜ அங்கங்களும், நாமும். 6—7—'25.

ஸமாஜ ஸ்தாபகராகிய நம்மை யார் என்ன செய்தாலும், நமக்குக் கஷ்டமோ, வியாகூலமோ, பரி வேதனையோ, பயமோ இல்லை, அவ்விதமல்லாமல் நமக்குச் செய்யவேண்டியதான எல்லா சங்கடங்களுக்காக நம்மை சிநேகித்து வந்திருக்கின்ற அங்கங்களை கஷ்டப்படுத்தி வேதனைப்படுத்துகின்றதானால் அது நம்மையே கஷ்டப்படுத்தினதுபோலாகும். அதினால் நம்மைக் கஷ்டப் படுத்துகின்றதில் ஏதாவது தோஷமுண்டென்று பரண கர்த்தாக்களுக்குத் தோன்றுகிறபட்சம் அங்கங்கள் அதை அனுபவிக்கத் தான் வேண்டும்.

173. அனுமதிப் பத்திரம். 1—8—'25.

ஒரு ஸமாஜ அங்கம் ஒரு ஆஸ்ரமத்திலிருந்து மற்றொரு ஆஸ்ரமத்திற்கு போகும்பொழுது அந்த ஆஸ்ரம பிரஸிடெண்டினுடைய கையெழுத்திட்ட ஒரு பாஸ் கிடைத்தால் மட்டும்தான் செல்லுகின்ற ஆஸ்ரமத்தில் பிரவேசிக்கக்கூடும்.

174. தலைமையாபீசுக்கு செல்வது. 1—8—'25.

ஜெனரல் பிரஸிடெண்டினுடைய அனுமதி இல்லாமல் யாதொரு அங்கமோ, உத்தியோகஸ்தரோ ஹெட்டாபீஸிற்கு வரவேண்டிய தேவையில்லை.

175. நமக்குள்ள விண்ணப்பங்கள். 13—5—'25.

யாதொரு அங்கமும், எந்தக் காரியத்தைப்பற்றியும், ஜெனரல் பிரஸிடெண்டினுடைய முகாந்திரமில்லாமல் நமக்கு நேரிட்டு விண்ணப்பம் அனுப்பக்கூடாது.

X. குற்றங்களும், பரிகாரங்களும்.

176. குற்றத்திற்குள்ள சமாதானம் (கேள்வி). 22—5—,22.

ஓர் ஆஸ்ரமத்திலுள்ள ஓர் அங்கம் ஸமாஜச் சட்டங்களுக்கு எதிராக ஏதாவது செய்தால் அந்த ஆஸ்ரமப் பிரஸிடெண்ட்டு அந்த அங்கத்தினிடத்தில் சமாதானம் கேட்க வேண்டியதாகின்றது.

177. அதற்குள்ள தண்டனை. 22—5—'22.

அவ்விதம் சமாதானம் கேட்கப்பட்டு அந்த அங்கம் குற்றக்காரனென்று அறிந்தால் அந்த அங்கத்தைக் கடுமையான தாக்கியதை (சிக்ஷை) செய்யவேண்டியதும், ஸக்தினியிலும், ஸபீதியிலும், ஜெபத்திலும், சேர்க்காமல் தனித்திருக்கச்செய்யவும் வேண்டியது. அதிகம் தண்டனை கொடுக்கவேணுமென்று தோன்றுவதானல் ஜெனரல் பிரஸிடெண்டிற்கு ரிப்போர்ட்டுச் செய்ய வேண்டியதுமாகிறது.

178. தான் அறியாத தவறுகள். 22—2—'25.

தான் அறியாமல் எந்தத் தவறுதல்களும் யாரும் செய்கின்றதில்லை. ஆனதினுல் அவ்வித விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளக் கூடாது.

179. சமாதானமும், எச்சரிக்கையும். 23—7—'31.

ஆஸ்ரம பிரஸிடெண்ட்டு, மினிட் எடிட்டர், ஜெனரல் பிரஸிடெண்ட்டு என்ற இவர்களல்லாமல், மற்ற எந்த உத்தியோகஸ்தரும், யாதொரு அங்கத்தோடும் சமாதானம் கேட்டு மன்னிப்பு செய்வதோ, தண்டிப்பதோ கூடாது.

180. மினிட் எடிட்டருடைய கண்டனம். 17—11—'25.

ஒரு அங்கத்தைப் பிரிப்பதற்கும் இடம் மாற்றுவதற்கும் உள்ள அதிகாரம் தவிர, மற்ற எல்லா தண்டனைகளும் மினிட் எடிட்டர் செய்யக்கூடுவதும், உத்தியோகஸ்தர்களை தண்டிக்க

வேண்டி வந்தால் அதற்குத்தகுந்த காரணத்தோடு கூடிய ஒரு ரிப்போட்டு ஜெனரல் பிரஸிடெண்டிற்கு அனுப்பவேண்டியதுமாகும்.

181. ஸ்தல மாற்றம். 1—8—'26.

ஓர் அங்கத்தை ஸமாஜ பரண யுக்திக்கனுசரித்து ஓர் ஆஸ்ரமத்திலிருந்து மற்றொரு ஆஸ்ரமத்திற்கு ஜெனரல் பிரஸிடெண்ட்டு மாற்றக்கூடும்.

182. நிராகார தண்டனை. 7—7—'31.

ஜெனரல் பிரஸிடெண்டு முதற்கொண்டு எதொரு உத்தியோகஸ்தரும், நிராகாரத்தோடு கூடிய தண்டனையை யாதொரு அங்கத்திற்கும் விதிக்கக்கூடாது.

183. ஜெனரல் பிரஸிடேண்ட்டுக்குள்ள அதிகாரம். 15—3—'26.

ஜெனரல் பிரஸிடெண்ட்டு ஒரு அங்கத்தை ஸமாஜத்திலிருந்து பிரிப்பதற்கும், தன்னுடைய யுக்தானுசாரம் தண்டனையை விதிப்பதற்கும் அதிகாரமுண்டு.

184. ஜெனரல் உத்தியோகஸ்தர்களுடைய குற்றங்களும், பரிகாரங்களும். 13—3—'26.

ஜெனரல் உத்தியோகஸ்தர்கள் யாதொரு குற்றத்திற்கும் இடமாக்கிக்கொள்ளக் கூடாது. அவர்கள் ஒருவரோடொருவர் பகைத்துக்கொள்கிறதானால்; ஸமாஜங்களுக்கு குழப்பம் உண்டாகின்றதும், நாம் ஸமாஜத்தை விட்டுவிடுவதுமாகும்.

185. பிரித்தவராயும், பிரிந்தவராயுமுள்ளவரைச் சேர்த்தல். 22—2—'25.

1930ம் ஆண்டிற்கு முன்பு ஸமாஜத்திலிருந்து பிரிந்தவரோ அல்லது நீக்கப்பட்டவரோ மறுபடியும் அவர் ஸமாஜத்தில் சேருவதற்காக வேண்டி அபேக்ஷித்தால் ஜெனரல் பிரஸிடெண்டும், பாக்கி ஜெனரல் உத்தியோகஸ்தர்களும் கூடி யோசித்து யுக்தானுசாரப்படி சேர்த்துக்கொள்ள வேண்டியது. 1930-வது ஆண்டுக்குப்

பிறகு ஸமாஜத்திலிருந்து போனவருடைய அபேக்ஷை கிடைத்தால், நம்முடைய அனுமதியில்லாமல் சேர்த்துக்கொள்ளக்கூடாது.

186. சேர்க்கக்கூடாதவர். 22—2—'25.

ஸமாஜத்திலிருந்து அக்கிரமம் செய்து போனவரையும், அந்தப்படி பிரித்தவரோடுள்ள சிநேகம் நிமித்தம் ஸமாஜத்தை விட்டுப்போயிருப்பவரையும் ஒருபொழுதும் ஸமாஜத்தில் சேர்க்கக்கூடாது. காரணம், அவர்கள் ஸமாஜத்தை சிநேகித்தவர்களல்ல.

187. மினிட் எடிட்டருடைய அதிகாரம். 17—11—'25.

மினிட் எடிட்டர்தான் நேரிட்டுக்காணுகின்ற குற்றங்களுக்கும், மினிட் பரிசோதகருடைய கையிலிருந்து தனக்குக் கிடைக்கின்ற ரிப்போர்ட்டையனுசரித்தும், ஜெனரல் உத்தியோகஸ்தர்களைத் தவிர பாக்கி எல்லா உத்தியோகஸ்தர்களோடும், அங்கங்களோடும் நேரில் சமாதானம் கேட்டு அதற்கவசியமுள்ளதைச் செய்ய வேண்டியதுமாகிறது.

188. ஜெனரல் பிரதிநிதிக்கு சேரவேண்டிய ரிப்போர்ட்டுகள். 23—7—'31.

ஓர் ஆஸ்ரமப் பிரஸிடெண்ட்டும், மினிட் எடிட்டரும், ஜெனரல் பிரஸிடெண்ட்டும், யாதொரு ஆஸ்ரம உத்தியோகஸ்தரையோ, அங்கத்தையோ எந்தவிதம் தண்டித்தாலும், அதன் விபரத்திற்குள்ள ஒரு ரிப்போர்ட்டு அந்தந்த உத்தியோகஸ்தர்கள், ஜெனரல் பிரதிநிதிக்கு அனுப்பவேண்டியதுமாகிறது.

189. ஜெனரல் பிரதிநிதி, மேல் உத்தியோகஸ்தருக்கு தெரிவிக்க வேண்டிய சிக்ஷா ரிப்போர்ட்டு. 23—7—'31.

ஜெனரல் பிரதிநிதிக்குக்கிடைக்கின்றதான தண்டனை ரிப்போர்ட்டுகளைப் பார்த்து, அங்கங்களுக்குத் தண்டனை விதிக்கக்கூடிய உத்தியோகஸ்தர்கள், அவர்கள் விதித்த தாக்கீது (பரிகாரம்) போக பாக்கியுள்ள தண்டனைகள் அதிகமென்று தோன்றுகிறதானால் தண்டித்த உத்தியோகஸ்தருடைய மேலுத்தியோ-

தருக்கு ரிப்போர்ட்டுச் செய்து தண்டனையைக் குறைப்பதற்குள்ள முயற்சியைத்தான் செய்யவேண்டியதல்லாது தாக்கியதையைச் சம்மந்தப்பட்டு, ஜெனரல் பிரதிநிதி யாதொன்றும் செய்யவேண்டியதில்லை.

190. ஜெனரல் பிரதிநிதியும், ஆஸ்ரமக்குறைகளும். 23—5—'25.

ஜெனரல் பிரதிநிதி, அந்தந்த ஆஸ்ரமங்களிலுள்ள குற்றங்களை சரியாக பரிசோதித்துக் காணுகின்ற தவறுதலான வித்தியாசங்களைக்குறித்து ஆஸ்ரமக்காரருடன் கேட்க வேண்டியதும், அதைப்பற்றி ஜெனரல் பிரஸிடெண்டிற்கு ரிப்போர்ட்டு கொடுக்க வேண்டியதுமாகிறது.

191. ஜெனரல் பிரஸிடேண்ட்டும், மினிட் எடிட்டரும், சிக்ஷிக்க வேண்டியதானவைகள். 23—7—'31.

ஜெனரல் பிரஸிடெண்ட்டு ஓர் அங்கத்தை தண்டித்தால் அதனுடைய நேர் காப்பி மினிட் எடிட்டருக்குக் கொடுக்க வேண்டியதும், அந்தப்படி ஓர் அங்கத்தை தண்டித்ததாக விவரம் கிடைத்தால் மினிட் எடிட்டர் அதே குற்றத்திற்கு தனக்கு கிடைத்த மினிட்டுப் பிரகாரம் அந்த அங்கத்தை தண்டித்ததான தண்டனையை துர்பலப்படுத்தியும், ஜெனரல் பிரஸிடெண்ட்டினுடைய தண்டனையானது நடப்பில் வந்திருக்கின்றதாவென்று கவனிக்கவேண்டியதுமாகிறது.

192. ஜெனரல் உத்தியோகஸ்தர்களுடைய குற்றங்கள். 13-3-25.

ஜெனரல் பிரஸிடெண்ட்டு தவிர பாக்கியுள்ள உத்தியோகஸ்தர்கள், தவறுதல் செய்வதானால் அதற்கு ஜெனரல் பிரஸிடெண்டே அவர்களுடன் நேராக சமாதானம் கேட்பதும், குற்றங்கள் என்று தெரிகின்றபட்சம் தண்டிக்கவேண்டியதுமாகின்றது.

193. ஜெனரல் பிரஸிடேண்டினுடைய குற்றங்கள். 13-3-'25.

ஜெனரல் பிரசிடெண்ட்டு ஏதாவது குற்றம் செய்திருந்தால், அதானது எந்த ஆஸ்ரமக்காரரோடு அக்குற்றம் செய்திருக்கிறதோ அவ்வாஸ்ரமக்காரர்கள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து ஒரு

மனு தயார் செய்து, ஜெனரல் பிரதிநிதிக்கு அனுப்பவேண்டிய தும், அவ்விதம் கிடைக்கின்ற மனுப்பிரகாரம் ஆஸ்ரமக்காரர்களை யும், ஜெனரல் பிரஸிடெண்ட்டு தவிர மற்றெல்லா உத்தியோகஸ் தர்களையும் தருவித்து, ஓர் நிர்வாக யோகம் கூடி அந்த யோகத் தில் ஷை மனுவைப்பற்றி ஆலோசித்து குற்றம் செய்ததாகத் தெளிவடைகின்றதானால் அன்று சேர்ந்திருக்கின்ற எல்லோரும் கூடி ஒப்பிட்டு ஜெனரல் பிரஸிடெண்டினிடத்தில் சமாதானம் கேட்கவேண்டியது.

194. அதற்குள்ள தண்டனை. 13—3—'25.

ஜெனரல் பிரஸிடெண்ட்டு தகுந்த முகாந்திரம் அளிக்காத பட்சம் ஸமாஜக்காரர்கள் எல்லோரும் சேர்ந்து தீர்மானப்படுத்து கின்ற விதம் தண்டனையை அனுபவிக்கவேண்டியதாகின்றது.

195. நமது அந்தரங்கக் காரியதரிசியினுடைய தவறுகள். 4–1–'29.

நம்முடைய பிரைவேட் செக்ரிடரியுடைய பேரில் ஏதாவது அஜாக்ரதைகளோ, தவறுதல்களோ, சமாஜத்திற்கெதிராகவோ, செய்கின்றதாக ஏதாவதொரு அங்கத்திற்குத்தோன்றுகிறதானால் அவர் உடனே எல்லா விபரங்களோடும் கூடிய ஒரு ரிப்போர்ட்டு நமக்கு அதிவேகமாய் அனுப்பவேண்டியதும், அதனுடைய நேர் காப்பி ஜெனரல் பிரஸிடெண்ட்டுக்கும் அனுப்பவேண்டியதுமா கிறது. அதன்னியில் ஷை பிரைவேட் செக்ரிடரியிடம் நேரில் ஏதாவது தவறுதல்களைப் பார்த்தாலும், அறிந்தாலும் அதற் குள்ள சிக்ஷையை நம்முடைய அனுமதியின்பேரில் செய்யவேண் டியதாகும்.

XI. ஆஸ்ரம உத்தியோகஸ்தர்களும், ரிக்கார்ட்டுகளும்.

196. ஆஸ்ரம உத்தியோகஸ்தர்கள். 21—5—'21.

ஆஸ்ரமத்திலுள்ள பரண கர்த்தாக்கள் என்பதானது:— ஆஸ்ரமப் பிரஸிடெண்ட்டு, ஆஸ்ரமக் காரியதரிசி, ஆஸ்ரம ...

கிஷதார், ஆஸ்ரமச் கிருஷி மானேஜர், ஆஸ்ரம ஸ்டோர் கீப்பர் என்ற இவர்களாகும்.

197. அவர்களை நியமிப்பதற்கும், விலக்குவதற்கும் மற்றுமுள்ள அதிகாரங்கள். 21—5—'25.

மேலே விவரிக்கப்பட்டிருக்கின்ற உத்தியோகஸ்தர்களை நியமிப்பதற்கும், உத்தியோகத்திலிருந்து தண்டிப்பதற்கும், பிரிப்பதற்குமுள்ள அதிகாரம் ஜெனரல் பிரஸிடெண்டிற்கு இருக்கிறதாகும்.

198. இரண்டு உத்தியோகம். 28—6—'24.

ஒருவர் இரண்டு உத்தியோகம் வகித்துக்கொள்ளக்கூடாது.

199. மேற்பார்வை. 31—1—'24.

ஆஸ்ரமக் காரியங்களுடைய மேற்பார்வை ஆஸ்ரமப் பிரஸிடெண்டிற்கு இருக்கிறது. பிரஸிடெண்ட்டு இல்லாத சமயங்களில் எல்லா உத்தரவாதங்களும், மேல் விசாரணைகளும் ஆஸ்ரமக் காரியதரிசிக்கு இருக்கின்றதாகும்.

200. ஆஸ்ரமப் பிரஸிடேண்ட்டு. 21—5—'21.

ஒரு ஆஸ்ரம பிரஸிடெண்ட்டு என்றால், ஆஸ்ரமத்திலுள்ள குற்றங்கள் யாவையும் தீர்த்து, சத்தியமாகவும், நியாயமாகவும் அங்கங்களை நடத்தியும், நடப்பில் கொண்டுவந்தும், அதன் நிமித்தம் ஆஸ்ரமத்திலுண்டாகின்ற எல்லா கஷ்டங்களையும், பொறுமையுடன் தான் சகித்தும், ஆஸ்ரமத்தை நிலை நிறுத்திக்கொண்டு வரவேண்டிய ஒருவராகிறது.

201. ஆஸ்ரமக் காரியதரிசி. 21—5—'21.

ஒரு ஆஸ்ரமப் பிரஸிடெண்டிற்குட்பட்டு, எல்லாக் காரியங்களும் நடத்துகிறதற்குள்ள ஓர் முக்கியமான காரியஸ்தனும், பிரதிநிதியுமாகும் ஆஸ்ரமக் காரியதரிசியானவர்.

202. ஆஸ்ரமக் காரியதரிசியினுடைய ரிக்கார்ட்டுகள். 21—5—'21.

அந்தந்த ஆஸ்ரமங்களிலிருக்கின்ற இடங்களுக்கடுத்துள்ள சித்த வித்தை கிரஹித்திருக்கின்றவர்களுடைய எல்லா விபரமும் காண்பிக்கின்ற ஒரு பட்டிகையும், ஸமாஜத்தில் சேருகின்ற அங்கங்கள் ஒப்பிடுகின்ற ஓர் ஸமாஜ ரிஜிஸ்தரும், வாங்குவதற்கும், கொடுப்பதற்குமுள்ள விபரம் காண்பிக்கின்ற ஒரு புஸ்தகமும், மேல் உத்தியோகத்திலிருந்து கிடைத்ததும், மேல் உத்தியோகத்திற்கு அனுப்புகிறதுமான கடிதங்கள் பயில் செய்கின்ற ஒவ்வொரு பயில்களும், வார ரிப்போர்ட்டு ரிஜிஸ்தரும், ஆஸ்ரமத்திலுள்ள முக்கியமான சம்பவங்களும் மற்றும் விசேஷமாய்க் குறிப்பதற்குண்டானால் அதற்குள்ள புஸ்தகங்களும், ஒரு பரிசோதனை ரிஜிஸ்தரும், பாரங்களும் அந்தந்த ஆஸ்ரமக் காரியதரிசி வசம் உண்டாயிருக்க வேண்டியதும், நாம் தேவைப்படும்பொழுது அவைகளைக் காண்பித்துக்கொடுக்க வேண்டியதுமாகிறது.

203. ஆஸ்ரம வார ரிப்போர்ட்டு. 13—10—'29.

ஆஸ்ரமத்திலுள்ள வேலைகள், ஜெபம், விசேஷமான விபரங்கள், வரவு செலவுகள், முதலான எல்லாச் சம்பவங்களும் அந்தந்த ஆஸ்ரமக் காரியதரிசிகள் அவரவருடைய வார ரிப்போர்ட்டில் அந்தந்த தினத்தில் எழுத வேண்டியதும், அது கிரமமாக எழுதாமலிருந்தால் மேலுத்தியோகஸ்தர்கள் சமாதானம் வாங்கவேண்டியதுமாகிறது. மேற் பிரகாறம் எழுதிய ரிப்போர்ட்டு மறுதினம் காலையில் ஐந்து மணிக்கு அதாவது ஜெபம் முடிந்தவுடன் எல்லா அங்கங்களுக்கும் தெரியும்படி படித்து அறிவிக்க வேண்டியதும், அது மேலுத்தியோகஸ்தருக்கு அனுப்பவேண்டியதாகுமென்றும் அவர்களோடு தெரியப்படுத்தவும் வேண்டியது.

204. வார ரிப்போர்ட்டு அனுப்பவேண்டிய முறை. 13–10–'29.

அவ்விதம் எழுதிய வார ரிப்போர்ட்டை, பிரதிதினம் அசல் எழுதி ஆஸ்ரமப் பிரஸிடெண்ட்டு கையொப்பு வைத்து வாரந்தோறும் மேலுத்தியோகஸ்தருக்கு அனுப்பவேண்டியதுமாகின்றது.

205. ஸ்டோர் வரவு சிலவு கணக்கும், வார ரிப்போர்ட்டும். 29—11—'29.

மேல் உத்தியோகஸ்தருக்கு அனுப்புகின்ற வார ரிப்போர்ட்டின் முடிவில் ஸ்டோர் கீப்பருடைய ஒரு வாரத்தினுடைய கணக்கு மொத்த எண் இவ்வளவென்ற விபரமும் காண்பிக்கவேண்டியது மாகும்.

206. ஆஸ்ரம போக்கிஷதார். 21—5—'21.

ஆஸ்ரமங்களில் வருகின்றதும், செலவு செய்கின்றதும், இருப்புள்ளதுமான எல்லாவித கணக்குகளுடைய உத்தரவாதங்கள் ஆஸ்ரம பொக்கிஷதாருக்கே இருக்கின்றதாகும். அதனுடைய வகையான விபரங்களை அவ்வப்பொழுது அவருடைய கணக்கில் சேர்த்தும், ஆஸ்ரம பிரஸிடெண்ட்டு முன்பாக எல்லா மாதங்களிலும் 1-ந் தேதிகளில் விபரமான ஒரு மாதாந்தர கணக்கு ஜெனரல் பொக்கிஷதாருக்கு அனுப்பவேண்டியதுமாகும்.

207. போக்கிஷதாருடைய கடமை. 21—5—'21.

ஆஸ்ரம பொக்கிஷதார் பணமும், கணக்கும் ஆஸ்ரமத்தில் அவசியப்படும் பொழுது, காண்பித்து அறியப்படுத்திக்கொடுக்க வேண்டியது.

208. ஆஸ்ரமச் செலவுகள். 21—5—'21.

ஆஸ்ரமத்திலிருந்து செலவிடுகின்ற தொகைக்கு பிரஸிடெண்ட்டும், பொக்கிஷதாரும் சேர்ந்து செலவு ஜாப்தாவில் ஒப்பிட்டதின் பின்பே தான் பணம் செலவு செய்ய வேண்டியது.

209. பாதுகாப்பினுடைய உத்தரவாதம். 21—5—21.

ஆஸ்ரமத்திலுள்ள தொகைகளும், இருப்புகளும் ஆஸ்ரம பொக்கிஷதாருக்கல்லாமல் மற்றெவருக்கும் இருப்பு வைத்துக் கொள்வதற்கோ, வாங்கிக்கொள்வதற்கோ அதிகாரமில்லை. பொக்கிஷதார் இல்லாத இடத்தில் காரியதரிசிக்குத்தான் இந்த உத்திரவாதித்துவம் உள்ளது.

210. மூலதனமும், கணக்கும் பரிசோதிப்பு. 21—5—21.

பொக்கிஷதாருடைய கையிலுள்ள மூலதனமும், கணக்கும் அந்தந்த மேலுத்தியோகஸ்தர்கள் பரிசோதனை செய்து அடையாளம் (கையொப்பு) வைக்கவேண்டியதாகும்.

211. மூலதனமும், ஜெனரல் பொக்கிஷதாரும். 21—5—21.

பொக்கிஷதார்கள் ஆஸ்ரமங்களிலுள்ள செலவுகள் போக மீதி ஏற்படுகின்ற தொகையை, அந்தந்த வருஷம் பூர்த்தியாகும் போது வரவு செலவு கணக்குகளுடன் சேர்த்து ஜெனரல் பொக்கிஷதாருக்கு அனுப்பவேண்டியதாகும்.

212. நமக்குள்ள நிதி (சுவாமிபண்டு). 12—10—'24.

எல்லா ஆஸ்ரமங்களிலும் ஸ்வாமி பண்டு என்ற ஓர் உண்டியல் வைக்க வேண்டியதாகும். அந்த உண்டியலை நம்முடைய அனுமதியில்லாமல் திறக்கக்கூடாது. ஆஸ்ரமத்திற்கு ஏதாவது நன்கொடையாகப்பணம் கிடைக்கிறதானால் அது உண்டியலில் போடாமல் தனியாக பொக்கிஷதார் வசம் இயல்பித்து வரவு வைத்துச் சேர்த்துக்கொள்ள வேண்டியதாகும்.

213. ஆஸ்ரம பொக்கிஷதாருடைய ரிக்கார்ட்டுகள். 21—5—'21.

ஆஸ்ரம பொக்கிஷதார்கள் அவரவர்களுடைய கைவசம் பேர்வழி நாள்வழிப் புஸ்தகம் ஒன்றும், ரசீது புஸ்தகமும், கிடைக்கின்றதும் செலவு செய்கின்றதுமான தொகைகளுடைய பில்களும், நாணய சம்பந்தமான காரியங்களைப்பற்றிய கடிதங்களும், பயில் செய்யவேண்டிய ஒவ்வொரு பயில்களும், மூலதனத்தோடு சேர்ந்த எல்லா வியாபாரங்களுக்குமுள்ள புஸ்தகங்கள் தொடங்கி இருப்புகளுடைய கணக்குகளும், எல்லா சமயங்களிலும் பத்திரப்படுத்த வேண்டியதாகும்.

214. ஆஸ்ரம ஸ்டோரும், ஸ்டோர் கீப்பரும். 29—11—'29.

பொதுவில் ஆஸ்ரம அங்கங்களுக்கு உபயோகப்படக்கூடிய ஸ்ஸாப் பொருள்களும், ஆகாரப் பொருள்களும், ஆஸ்ரம

ஸ்டோரில் ஒப்புவிக்க வேண்டியதாகும். அதனுடைய எல்லாப் பொறுப்புகளும், உத்தரவாதங்களும் ஆஸ்ரம ஸ்டோர் கீப்பருக்கு இருக்கின்றதாகும்.

215. ஸ்டோர் கணக்கு. 29—11—'29.

ஒவ்வொரு ஆஸ்ரமங்களிலுள்ள ஸ்டோர் கீப்பரானவர், அந்தந்த ஆஸ்ரம ஸ்டோரிலுள்ள வரவு சிலவு பொருள்களுடைய கணக்குகள் சரிப்படுத்துகின்ற ஓர் ஸ்டாக் புஸ்தகம் வைத்துக் கொண்டு அதில் ஒவ்வொரு தினமும் ஸ்டோரில் ஏற்பட்ட அரிசி முதலான எல்லாப் பொருள்களுடைய வரவு கணக்கும் அதிலிருந்து ஒவ்வொரு நேரத்திலும் செலவு செய்கின்ற அரிசி முதலான எல்லாப் பொருள்களுடைய விபரங்கள் தனித்தனியாக எழுதியும், ஒருநாள் முடிவில் மொத்தம் கண்டுபிடித்து அதன்படி ஒவ்வொரு நாள் கணக்குகளையும் வாரந்தோறும் விபரமாக ஒரு கணக்காய்ச் சேர்த்து, ஆஸ்ரம பிரஸிடெண்ட்டு மூலமாக ஸ்டோர் கீப்பர், ஜெனரல் பொக்கிஷதாருக்கு அனுப்பவேண்டியதாகிறது. ஆஸ்ரமத்தில் அதிகச் செலவுகள் வந்தால் இன்னின்ன சங்கதியால் அதிகச்செலவு வந்ததென்றுள்ள விபரமும் ரிமார்க் கலத்தில் எழுதவேண்டியதாகும்.

216. ஆஸ்ரம வகை விவசாய மானேஜர். 23—7—'31.

ஒவ்வொரு ஆஸ்ரமத்திலும் அந்தந்தச் சமயங்களில் பயிர் செய்விக்க வேண்டியதும், செய்யச்சொல்ல வேண்டியதும், அதுவுமல்லாமல் ஆஸ்ரமத்திலுள்ள கிருஷியை அதிகரித்துக்கொண்டு வருவதற்கு யுக்தியாகத் தோன்றுகின்ற எல்லா ஏற்பாடுகளைச் சம்பந்தப்பட்டும், அதைப்பற்றி மேலுத்தியோகஸ்தரோடு சேர்ந்து நடத்தவேண்டிய எல்லா ஏற்பாடுகளுக்குமுள்ள உத்தரவாதம் ஆஸ்ரமக் கிருஷி மானேஜருக்கு இருக்கின்றதாகும். கிருஷி மானேஜர் இல்லாத சமயங்களில் இவைகளை எல்லாம் ஆஸ்ரம பிரஸிடெண்ட்டே நடத்திக்கொள்ள வேண்டியதாகும்.

217. விவசாய ரிக்கார்ட்டுகள். 23—7—'31.

கிருஷி வேலைகளுக்குச் சம்மந்தப்பட்டுள்ள குறிப்புகளும், ரிப்போர்ட்டுகளும், பட்டிகைகளும், மற்றுமுள்ளவைகளும்

ஆஸ்ரமக்கிருஷி மானேஜர், ஆஸ்ரம பிரஸிடெண்ட்டு மூலமாக ஜெனரல் பிரதிநிதிக்கு அனுப்பவேண்டியதாகும்.

218. விவசாய ஏற்பாடுகள். 23—7—'31.

ஆஸ்ரமக்கிருஷியைப்பற்றி ஜெனரல் பிரதிநிதியால் கொண்டு வரப்படுகின்ற எல்லா ஏற்பாடுகளையும் ஆஸ்ரமக்கிருஷி மானேஜர் நடப்பில் கொண்டுவர வேண்டியதாகும்.

XII. ஜெனரல் உத்தியோகஸ்தர்களும், ரிக்கார்ட்டுகளும்.

219. தலைமை ஆபீஸ். 28—3—'26.

உலகத்திலுள்ள எல்லா சித்த ஸமாஜங்களும், ஹெட்டாபீஸினுடைய கீழ் உள்ளதாகும். அதை நாம் வடகரை (Badagara, N. M.) சித்த ஸமாஜத்திலேயே ஸ்தாபித்திருக்கிறோம்.

220. ஜெனரல் உத்தியோகஸ்தர்கள். 15—9—'22.

எல்லா ஸமாஜங்களுக்கும் முழுப்பொறுப்பு வாய்ந்த உத்தியோகஸ்தர்களாவன:—

ஜெனரல் பிரஸிடெண்ட்டு, ஜெனரல் காரியதரிசி, ஜெனரல் பிரதிநிதி, ஜெனரல் பொக்கிஷதார், மினிட் எடிட்டர் ஆகிய இவர்களாகும்.

221. ஜெனரல் பிரஸிடேண்ட்டு. 15—9—'22.

உலகத்திலுள்ள எல்லா சித்த ஸமாஜங்களுடைய முழு அதிகாரங்களும் ஜெனரல் பிரஸிடெண்ட்டுக்குள்ளதாகும்.

222. ஜெனரல் உத்தியோகஸ்தர்களை நியமித்தல். 28—8—'25.

மேலே காண்பிக்கப்பட்ட எல்லா ஜெனரல் உத்தியோகஸ்தர்களையும் நேராக நாமே நியமிக்கின்றதாகும். நமக்குப் பின்னால் உலகத்திலுள்ள ஸமாஜக்காரர்கள் எல்லோரும் ஒன்று கூடி அதிலிருந்து தேர்ந்தெடுக்கவேண்டியதாகும்.

223. தற்கால ஜெனரல் வகை நியமனங்கள். 13—3—'26.

ஜெனரல் உத்தியோகஸ்தர்களில் யாராவது ஒரு அங்கம் இல்லையானால் அந்த ஜெனரல் உத்தியோகஸ்தருடைய இன்சார்ஜ் ஜாக்குத் தகுந்த வேறொரு உத்தியோகஸ்தரை ஜெனரல் பிரஸிடெண்ட்டே நியமித்துக்கொள்ளலாம்.

224. ஜெனரல் டைரி (Diary). 22—9—'27.

ஜெனரல் உத்தியோகஸ்தர்கள் யாவரும் ஸமாஜத்தைப்பற்றியோ, ஸமாஜ அங்கங்களைப்பற்றியோ, ஏதாவது சொல்லவோ நடத்தவோ செய்கின்றதெல்லாம் ஒரு நோட் புஸ்தகத்தில் சமயம் குறித்து எழுதிவைக்க வேண்டியதாகும். நாம் தேவைப்படும் பொழுது அவைகளை நமக்கு அனுப்பிக்கொடுக்க வேண்டியது மாகும்.

225. பரிபாலனத்தின் முடிவுகள். 22—9—'27.

ஸமாஜ சம்மந்தமாக நடப்பில் கொண்டு வருகின்ற யாதொரு காரியங்களைப் பற்றியும், அங்கங்களுடைய தண்டனை, நட்பு என்பவைகளைப் பற்றியும் தீர்ப்புச் செய்யப்பட்ட எல்லா உத்திரவுகளுடைய காப்பிகளும், ஜெனரல் பிரதிநிதிக்கும், மினிட் எடிட்டருக்கும் அனுப்பிக்கொடுக்கவேண்டியதாகும். நாணய சம்மந்தமான காரியங்களைப்பற்றியுள்ள தீர்ப்புகளை ஜெனரல் பொக்கிஷதாருக்கும் அனுப்பவேண்டியதுமாகிறது.

226. மினிட் பரிசோதிப்பவருடைய கடமை. 17—11—'25.

ஆஸ்ரமங்களிலிருந்து கிடைக்கின்ற மினிட்டுகளை, மினிட் பரிசோதகர் பரிசோதனைசெய்து அங்கங்களுடைய தவறுகளுக்குள்ள ரிமார்க்கை மினிட் எடிட்டருக்கு ரிப்போர்ட்டு செய்கின்றதல்லாமல் வேறே யாதொன்றும் செய்யவேண்டியதில்லை.

227. மினிட் எடிட்டர். 17—11—'25.

மேற் பிரகாரம் கிடைக்கின்ற ரிப்போர்ட்டையனுசரித்து மினிட் எடிட்டர் ஓர் அங்கத்தை தண்டித்தாலும், அதல்லாமல்.

ஜெனரல் பிரஸிடெண்ட்டு ஷி எடிட்டருடைய ரிப்போர்ட்டை அனுசரித்து, ஓர் உத்தியோகஸ்தரை தண்டிக்கவோ அல்லது ஓர் அங்கத்தைப் பிரிக்கவோ செய்தாலும், அவ்விவரங்களை அந்தந்த மினிட்டிலும், தண்டனை ரிஜிஸ்டரிலும் சேர்ப்பதற்காக மினிட் எடிட்டர், மினிட் பரிசோதகருக்கு அதை அனுப்பிக்கொடுக்க வேண்டியது.

228. மினிட் பரிசோதகர். 23—7—'31.

மினிட் பரிசோதகர் மினிட் எடிட்டருக்குட்பட்ட ஓர் உத்தியோகஸ்தரல்லாமல் ஒரு ஜெனரல் உத்தியோகஸ்தரல்ல.

229. மினிட் பரிசோதகரின் ரிக்கார்ட்டுகள். 23—7—'31

மினிட் பரிசோதகர் ஆஸ்ரமத்திலிருந்து கிடைக்கின்ற மினிட்டுகளை நம்பரும், தேதியும் வைத்து குறிப்பிடுகின்ற ஒரு ரிஜிஸ்டரும், ஆஸ்ரமங்களில் விசேஷமான சம்பவங்களைக் காண்பிக்கின்ற ஒரு ரிஜிஸ்டரும், மினிட்டிலுள்ள எல்லா குற்றங்களையும் காண்பிக்கின்ற மினிட் ரிமார்க் ரிஜிஸ்டரும் வைத்துக்கொள்ள வேண்டியதாகும்.

230. மினிட் எடிட்டருடைய ரிக்கார்ட்டுகள். 23—7—'31.

மினிட் எடிட்டர், மினிட் பரிசோதகருடைய கையிலிருந்து கிடைக்கின்ற ரிமார்க்கை பதிவு செய்கின்றதற்காக ஒரு ரிஜிஸ்டரும், ஜெனரல் பிரதிநிதிக்குக் கொடுக்கவேண்டிய விபரங்கள் காண்பிக்கின்ற ஒரு தண்டனை ரிஜிஸ்டரும், ஒவ்வொரு அங்கங்களுடைய ஸ்திதிகளைக் குறிக்கின்ற ஒரு ரிஜிஸ்டரும், ஜெனரல் பிரஸிடெண்டிற்கும், ஜெனரல் பிரதிநிதிக்கும் அனுப்புகின்ற வார ரிப்போர்ட்டுகளில் பதிவு செய்யவேண்டிய விபரங்களைக் குறிக்கின்ற குறிப்புகளும், மேலுத்தியோகத்திலிருந்து கிடைக்கின்றதும், மேலுத்தியோகஸ்தர்களுக்கு அனுப்பவேண்டியதுமான கடிதங்களுடைய ஒவ்வொரு பயில்களும் தனித்தனியாக வைத்துக்கொள்ளவேண்டியதுமாகிறது.

231. ஜெனரல் பிரஸிடெண்ட்டுக்கு சேரவேண்டிய மினிட் எடிட்டரின் வார ரிப்போர்ட்டுகள். 17—8—'27.

மினிட் எடிட்டர், வாரந்தோறும் எல்லா ஆஸ்ரமங்களிலுள்ள விபரங்கள் காண்பிக்கின்ற ஒரு வார ரிப்போர்ட்டு ஜெனரல் பிரஸிடெண்ட்டுக்கு அனுப்பிவைக்கவேண்டியதாகும்.

232. ஜெனரல் பிரதிநிதிக்கு சேரவேண்டிய மினிட் எடிட்டருடைய வார ரிப்போர்ட்டுகள். 23—7—'31.

மினிட் எடிட்டர், ஆஸ்ரமங்களிலிருந்து கிடைக்கின்ற மினிட்டுகளிலிருந்து ஆஸ்ரம ஸ்திதிகளைச் சம்மந்தப்பட்டுள்ள சுருக்கமான விபரம் காண்பிக்கின்றதான ஒருவார ரிப்போர்ட்டு ஜெனரல் பிரதிநிதிக்கு அனுப்பிவைக்க வேண்டியதாகும்.

233. ஜெனரல் காரியதரிசியினுடைய வேலைகளும், ரிக்கார்ட்டுகளும். 7—6—'24.

ஸமாஜ சம்பந்தமான எல்லாவித ரிக்கார்ட்டுகளுடைய உத்திரவாதம் ஜெனரல் காரியதரிசிக்கு இருக்கின்றதாகும். அவர் ஜெனரல் பிரஸிடெண்ட்டு தருகின்ற எல்லாக் கடிதங்களுக்கும் வேண்டியது போலச் செய்து, அவைகளை அனுப்பவேண்டிய இடங்களுக்கனுப்பியும், பயில் செய்யவேண்டியவைகளைப் பயில் செய்தும் வைக்கவேண்டியது. ஸமாஜத்தைப்பற்றிய யாதொரு ரிக்கார்ட்டுகளையும் நாசம் செய்யக்கூடாது. அந்தந்தக் காலங்களில் யுக்தியாகத் தோன்றுகின்ற ரிஜிஸ்டர்களும், வருஷாந்திர ரிப்போர்ட்டுகளையும் தயாரித்து வைக்கின்றதுடன், ஒரு இன்டெக்ஸ் ரிஜிஸ்டரும் தயாரித்து வைத்து அவைகளை தனித்தனியாக பத்திரப்படுத்தி வைக்கவேண்டியதும், நாம் அவசியப்படும்பொழுது ஆஜராக்க வேண்டியதுமாகிறது.

234. ஜெனரல் காரியதரிசியும், அங்கங்களும். 19—1—'28.

ஜெனரல் காரியதரிசியானவர் அங்கங்களிடத்தில் குற்றமுண்டென்று ரிக்கார்ட்டு மூலம் கண்டால், அதைப்பற்றி ஜெனரல்

மினிட்

பிரஸிடெண்டிற்கு ரிப்போர்ட்டு செய்கின்றதல்லாமல், அதைப் பற்றி சமாதானம் (கேள்வி) கேட்பதோ, ஏதாவது ஆர்டர் கொடுக்கவோ கூடாது. தான் நேராகவே பார்க்கின்ற குற்றங்களுக்குச் சமாதானம் கேட்டு, அதை தண்டனை ரிப்போர்ட்டுடன் சேர்த்து மேலதிகாரிக்கு அனுப்பவேண்டியதுமாகிறது. அவருடன் நல்ல வார்த்தைகளைச் சொல்லி அவரை மேன்மைக்குவரச் செய்தும், மறுபடியும் அவர் குற்றங்கள் செய்யாதிருப்பதற்காக உஷார் படுத்தவும் வேண்டும். அவர் ஒரு விதத்திலும் நன்ருகவில்லை என்று தனக்கு தோன்றுகிறபட்சம் அவரை ஸமாஜத்தில் வைத்துக்கொள்ளக்கூடாதென்ற காரிய காரணங்கள் சகிதம் ஜெனரல் பிரஸிடெண்ட்டுக்கு ரிப்போர்ட்டு செய்ய வேண்டியதாகும்.

235. ஜெனரல் போக்கிஷதாருடைய வேலைகளும், ரிக்கார்ட்டுகளும்.

7—4—'24.

ஜெனரல் பொக்கிஷதார், எல்லா ஆஸ்ரமங்களிலிருந்தும், ஜெனரல் பிரஸிடெண்டு முதலான எல்லா உத்தியோகஸ்தர்களிடமிருந்தும், அவர்களுடைய மாதாந்திர வரவு செலவு, இருப்புக் கணக்குகள் யாவும் மாதந்தோறும் 1-ந்தேதிகளில் அனுப்பிக் கிடைக்கத் தகுந்த விதத்தில் ஏற்பாடுகள் செய்யவேண்டியதும், அவைகள் கிடைத்தால் பரிசோதனை செய்து தான் வைத்திருக்கின்ற மாதாந்திர கணக்கிலும், வருஷாந்திர கணக்கிலும் சேர்த்து மாத முடிவிலும், வருஷாந்திரக் கடைசியிலும் அதனுடைய விபரமான ஒரு கணக்கு ஜெனரல் பிரஸிடெண்ட்டுக்கு அனுப்ப வேண்டியதுமாகும். ஸமாஜத்தில் விற்பனைக்குள்ள புஸ்தகங்கள் முதலான தொகைகளினுடைய ஒரு கணக்கும், வருஷந்தோறும் ஜெனரல் பிரஸிடெண்ட்டுக்கு அனுப்பிவைக்கவும் வேண்டும் இதுவுமல்லாமல் ஆஸ்ரமங்களிலுள்ள எல்லா ஸ்டோர்களின் மொத்தமான ஒரு வருஷத்துக் கணக்கும் ஷை ஜெனரல் பிரஸிடெண்ட்டுக்கு அனுப்பிக் கொடுக்க வேண்டியதுமாகின்றது. அவைகளை எப்பொழுது நாம் தேவைப்படுகின்ருமோ அந்தச் சமயத்தில் எல்லா விபரங்களுமடங்கிய ஒரு கணக்கு நமக்கும் அனுப்பித்தர வேண்டியதாகும்.

236. ஜெனரல் பிரதிநிதியும், பரிபாலனமும். 23—5—'25.

சித்த ஸமாஜ ஜெனரல் பிரதிநிதி என்றால், எல்லா ஸமாஜங்களுடைய யாவற்று காரியங்களுக்கும் பதில் சொல்லக்கூடிய ஒருவராகும். அவருக்கு ஆஸ்ரம பரண (பரிபாலனம்) காரியத்தில் பிரவேசிக்கவோ அங்கங்களை தாக்கியதை (சிக்ஷை) செய்யவோ, தண்டனையை விதிக்கச் சொல்லவோ அதிகாரமில்லை.

237. ஜெனரல் பிரதிநிதியும், புதிய ஏற்பாடுகளும். 22—9—'27.

ஜெனரல் உத்தியோகஸ்தர்கள் ஏதாவதொரு காரியம் நடப்பில் கொண்டுவர உத்தேசிக்கின்றதானால், அதை முன்னதாகவே ஜெனரல் பிரதிநிதிக்குத் தெரியப்படுத்த வேண்டியதாகும். அந்தப்படி விபரம் கொடுத்து, அதற்கு மறுபடி (பதில்) கிடைத்த பின்புதான் அக்காரியம் நடப்பில் கொண்டுவர வேண்டியதாகும். ஆனால் அவ்விதம் பதில் கிடைக்கத் தாமதப்பட்டால் அதன் விபரத்தைக் காண்பித்துக்கொண்டு அந்தக்காரியத்தை நடப்பில் கொண்டுவரலாம்.

238. ஜெனரல் பிரதிநிதியினுடைய வேலைகள். 8—2—'29.

அங்கங்களுடைய எல்லாக் கஷ்டங்களைத் தீர்ப்பதற்கும், அவர்களுடைய மனோபிஷ்டங்களை (ஆவலாதிகளை) ஒன்றும் ஒளித்து வைக்காமல் வெளிப்படுத்தி, அவைகளை உத்தியோகஸ்தர்களுக்குச் சுட்டிக்காண்பித்து அங்கங்களுக்குள்ள எல்லா சங்கடங்களையும் நிவர்த்தியாக்கியும், சொத்துக்களினுடைய எல்லாக் காரியங்களையும் விசாரித்து சரியானபடி நடத்திவரவேண்டியதுமாகும்.

239. ஜெனரல் பிரதிநிதிக்கு சேரவேண்டிய ரிப்போர்ட்டுகள். 25—10—'29.

ஆஸ்ரமங்களிலுள்ள கிருஷியினுடைய எல்லா விபரங்களும், அதாவது கிருஷியிலிருந்து எவ்வளவு லாபம் கிடைத்ததென்றும், அந்தந்தக் காலங்களில் இன்னின்ன கிருஷிகள் நடத்துகின்றதென்றும், கந்தாயம் (வரி), குத்தகை என்றவைகளைப்பற்றிய விபரங்களையும், ஸமாஜ அங்கங்களுடைய சுகஸ்திதிகளையும்,

அவர்களுடைய ஒற்றுமையும், பழக்கங்களையும் அந்தந்தச் சமயங்களில் ஜெனரல் பிரதிநிதிக்கு, அந்தந்த ஆஸ்ரம பிரஸிடெண்ட்டுகள் தெரிவித்துக் கொடுக்கவேண்டியதாகும்.

240. ஜெனரல் பிரதிநிதியும், விவசாயமும், கைத்தொழிலும், வியாபாரமும். 23—7—'31.

ஸமாஜ சம்பந்தமான எல்லா இடங்களிலுமுள்ள எல்லா வகை விவசாயம், வியாபாரம், கைத்தொழில் இதுகளுக்குச் சம்பந்தப்பட்ட உத்தரவாதமும், பரணமும் (ஆளுகை) ஜெனரல் பிரதிநிதிக்குள்ளதாகும்.

241. ஜெனரல் பிரதிநிதியும், விவகாரங்களும். 4—1—'29.

ஸமாஜ சம்பந்தமாய் ஏற்படுகின்ற எல்லா விவகாரங்களையும், ஸமாஜத்திற்காக ஜெனரல் பிரதிநிதியின்பேரில் நடத்தவேண்டியதாகும்.

242. ஜெனரல் பிரதிநிதியினுடைய வார ரிப்போர்ட்டு. 23–7–'31.

வாரந்தோறும் ஜெனரல் பிரதிநிதி தான் செய்த வேலையின் விபரத்தைப்பற்றியுள்ள ஒரு வார ரிப்போர்ட்டு ஜெனரல் பிரஸிடெண்ட்டுக்கு அனுப்பிவைக்க வேண்டியதாகும்.

243. ஜெனரல் பிரதிநிதியினுடைய ரிக்கார்ட்டுகள். 23—7—'31.

ஆஸ்ரம அங்கங்களைச் சம்பந்தப்பட்டும், ஸமாஜ சொத்துக்களைச் சம்பந்தப்பட்டதும், ஆஸ்ரமங்களில் விவசாயம், வியாபாரம், கைத்தொழில் முதலியவைகளைப்பற்றியுள்ள எல்லா விபரங்களும் காண்பிக்கின்றதான யாவற்று ரிஜிஸ்டர்களும், பட்டிகைகளும், பயில் (file) களும் ஜெனரல் பிரதிநிதி பத்திரப்படுத்தி வைக்க வேண்டியதாகும்.

244 புதிய ஜெனரல் பிரதிநிதியை நியமித்தல். 8—2—'29.

ஜெனரல் பிரதிநிதியை மாற்றுகின்ற சமயத்தில் சொத்துக்களின் சம்பந்தமான எல்லா ஏற்பாடுகளுக்கும், அவருக்கு பதிலாக

நியமிக்கின்ற ஜெனரல் பிரதிநிதியின் பேரில் திருப்பிக் கிடைப்பதற்காகவேண்டி அந்தந்த யிடத்திலுள்ள கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்களுக்கு; ஜெனரல் பிரசிடெண்ட்டு, ஜெனரல் காரியதரிசி, நம்முடைய பிரைவேட் செக்ரடெரி முதலானவர்கள் சேர்ந்து எழுதிக் கையொப்பமிட்ட கடிதம் அனுப்பித் திருப்பிக்கொள்ள வேண்டியதாகும்.

245. அதற்குள்ள விளம்பரம். 3—2—'29.

ஷை ஜெனரல் பிரதிநிதியை மாற்றும்பொழுது, அதனுடைய விபரம் கெஜட்டில் ஜெனரல் பிரசிடெண்ட்டு, ஜெனரல் காரியதரிசி நம்முடைய பிரைவேட் செக்ரடெரி என்னுமிவர்கள் ஒப்பிட்டு பிரஸித்தப்படுத்த வேண்டியதுமாகும்.

246. ஜெனரல் பிரதிநிதியும், சோத்துக்களும். 8—2—'29.

ஜெனரல் பிரதிநிதி ஸமாஜத்திலிருந்து பிரிந்தாலோ அல்லது அவரை பிரிக்கவோ செய்தால், அவருக்கு ஸமாஜ வகையான தன்னுடைய பேறிலுள்ள யாதொரு விதமான சொத்துக்களுக்கும் எவ்வித அதிகாரமும், பாத்தியதையுமில்லை.

247. ஜெனரல் பிரசிடெண்டினுடைய பரிபாலனம். 15–12–'25.

சித்த ஸமாஜத்தில் நடக்கின்ற எல்லாவித பரணத்தினுடைய உத்தரவாதங்களும், மேல் விசாரணைகளும், தீர்ப்புகளும் ஜெனரல் பிரசிடெண்ட்டுக்கு இருக்கிறதாகும்.

248. வார ரிப்போர்ட்டும், பரிபாலனமும். 15—12—'25.

ஆஸ்ரமங்களிலிருந்தும், ஜெனரல் உத்தியோகஸ்தர்களிடமிருந்தும், கிடைக்கின்ற வார ரிப்போர்ட்டுகளை கிரமமாக ஜெனரல் பிரசிடெண்ட்டு பரிசோதனை செய்து, அவைகளைப்பற்றியுள்ள எல்லாக் குற்றங்களுக்கும் நிவாரண வழிகளை அவரவருக்குத் தெரியப்படுத்தியும், குற்றக்காரரை தண்டித்தும், மறுபடியும் அவ்வித குற்றங்கள் ஏற்படாதவாறு செய்து, குற்றங்களே இல்லாமலாக்கி, ஸமாஜ அபிவிருத்திக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளும் [illegible] வேண்டியது. அவ்வகை ரிக்கார்ட்டுகளில் தனியாகவும், [illegible] விப[illegible]

விசேஷமாகவும் ஏதாவது விபரங்கள் உண்டாயிருந்தால் நமக்கு அத்தருணத்திலேயே அறிவிக்கவேண்டியதுமாகும். அவ்விதம் சரியான பரிசோதனை செய்யாதுபோனல் ஸமாஜத்தில்பல குறைவுகளும் வந்து சேருவதாகும்.

249 வருஷாந்திர ரிப்போர்ட்டுகள். 22—3—'22.

ஜெனரல் பிரசிடெண்ட்டு, வருஷந்தோறும் மொத்தமாக ஸமாஜத்திலுண்டாயிருக்கின்ற வேலை விபரங்களைப்பற்றிய ஒரு பரிபாலன ரிப்போர்ட்டு வருஷாந்திர கணக்குடன் சேர்த்து, நாம் இன்ன இடத்திலிருக்கின்றோமென்று தெரிந்தால் நமக்கு அனுப்பவேண்டியதும், அவ்விதம் தெரியாதுபோனல் தயாராக்கிய ரிப்போர்ட்டுகளை ஹெட்டாபீஸில் பயில் செய்து வைக்கிறதும், நாம் அவசியப்படும்பொழுது அதுகளைக் காண்பிக்கவேண்டியதுமாகிறது.

XIII. நம்முடைய அந்தரங்கக் காரியதரிசி.

250. நமது அந்தரங்கக் காரியதரிசியினுடைய வேலைகள். 8–2–'29.

இவைகளல்லாமல் நமக்கு வேண்டித் தனியாக ஒருபிரைவேட் செக்ரடெரியை நாம் நியமித்துக்கொள்கிறதாகும். ஷ்டி செக்ரடெரிக்கு நமக்கு வருகின்ற எல்லா கடிதங்களைப் பார்ப்பதற்கும், ஒப்பிடுவதற்கும், அதன்படி யாவற்று ரிஜிஸ்டர்களும், மணியார்டர்களும் வாங்குவதற்கும், ரசீது கொடுப்பதற்கும், நாம் அனுப்புகின்ற எல்லா ஆர்டர்களிலும், கடிதங்களிலும் நமக்காக ஒப்பிடவேண்டியதுமான எல்லா அதிகாரங்களும் இருக்கின்றதாகும். ஆனல் நமக்கு வருகின்ற யாதொருவித கடிதங்களும் நம்முடைய உத்திரவில்லாமல் உடைத்துப்பார்க்க அவருக்கு அதிகாரமில்லை.

21—7—'31
வள்ளிக்கோட்டை.

ஸ்வாமி சொல்ப்பிரகாரம்,
(Sd) S. சங்குன்னி.

அறிவிப்பு.

சித்த வித்யை கிரஹித்த எல்லா சகோதர சகோதரிகளுக்கும் தெரிவித்துக் கொள்வது யாதெனில்:—

சித்த ஸமாஜ ஸ்தாபகர், சுவாமி ஸ்ரீ சிவானந்த பரமஹம்ஸர் அவர்களுடைய சித்த வித்யையை, ஷை வித்யை கிரஹித்த யாரிடத்திலிருந்து பெற்றுக்கொண்டாலும் சுவாமிகளுக்கு அணுப் பிரமாணமும் வித்தியாசமில்லை. ஷை வித்யையானது அநேக காலமாக உலகத்திலிருந்து நசித்துப்போயிருந்ததை சுவாமிகளால் கண்டுபிடிக்கப்பட்டு, இவைதான் சர்வ ஜீவிகளுக்கும் வேண்டிய தென்பதாக சுவாமிகளுக்குத் தோன்றியதிலிருந்து, உலகத்திற்கே தான் கர்த்தாவாகி காரண குருவைக் காட்டிக்கொடுத்தும், சமத்வத்தோடும், ஜாதி மத பேதமின்றியும் நடப்பில் கொண்டுவருகின்றவை யாகும். இத்தகைய நடவடிக்கைகளுக்கு மீறி எவரும் உபதேசம் கொடுத்து யாதொருவித லௌகீக தக்ஷிணைகளோ, பிரதிப்பலனோ அடையக்கூடாது. காரணம், சித்த வித்யையானது ஜீவரக்ஷார்த்த மாகும். அதற்கு யாதொரு பிரதிப்பிரயோஜனமும் பெறக்கூடிய தல்ல. அவ்விதமுள்ள ஷை வித்யையை பெற்றுக்கொண்டவர்கள் சுவாமிகளுடைய நிச்சயத்தை அனுசரித்து நடந்துக்கொள்ள வேண்டியதாகும். அதற்கு மீறி மற்றவர்களுடைய நிச்சயத்தின்படி நடந்துக்கொள்வார்களானால், யாதொரு பலனுமடையாமல் மகா பாபிகளாகவும் திருகிறார்கள். சித்த வித்யை எதற்கென்றால் அவரவருடைய ஜீவனைக் காப்பாற்றுகின்றதற்கும், ஜீவனுடைய மேல்கதிக்கும், அதன் நிமித்தம் ஜீவேஸ்வர ஐக்கியமாகி ஆனந்தப் பிராப்திக்குமட்டுமாகும். அவ்விதம் வித்யை அடைந்தவர்கள், சகல ஜீவராசிகளிடத்திலும் தயையோடும், ஐக்கியத்தோடும் நடந்துக் கொள்ள வேண்டியதாகும். அவர்கள் துர்ப்பழக்கமுள்ளவர்களோடு சகவாசம் செய்யவும் கூடாது. அவ்விதம் சுவாமிகளுடைய நிச்சயப்பிரகாரம் நடப்பார்களானால், அவர்களுக்கு நாளடைவில் சகல தோஷங்களும் நீங்கி சித்த வித்யையினுடைய பலனையும் அனுபவிப்பார்கள். அவ்விதமில்லாமல் தம் தம் ஜீவனை ஒரு தம்பிடிப் பிரமாணமும் மதிக்காமல், யாதொரு தத்துவத்தையும் அறிந்துக்கொள்ளாமல் துஷ்ட செய்கையுடன் அதோகதியில் நடந்துக்கொள்வார்களானால் அவர்கள் பிரம்மஹத்தியாதி பாபிகளாவார்களென்று சுவாமிகளால் போதிக்கப்படுவதிலிருந்து, அவ்வித செய்கைகளிருந்தால் அவைகளை விட்டும், விடச்செய்தும் அனைவரும் குரு புத்திரர்களாகி மனிதத் தன்மையில் வாழ்ந்து வரவேண்டுமாய் மிக்க அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இப்படிக்கு,

மதுரை சித்த வித்யா அப்யாசிகள்.